Registered as a Newspaper    பக்கங்கள் 08    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 10    (23.3.94)    புதன்கிழமை    ஓசை 33

## 1000 குழந்தைகளை தத்தெடுக்க புனர்வாழ்வுக்கழகம் திட்டம்

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் பெற்றோரை இழந்த ஆயிரம் குழந்தைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தத்தெடுக்கவுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டம் நாளை வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. தத்தெடுக்கப்படும் இக் குழந்தைகள் 21 வயதை அடையும்வரை இத்திட்டத்தின்கீழ் உதவியைப் பெறுவர். இத்திட்டத்திற்கமைய வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட 1000 குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தத்தெடுக்கப்படுவர். யாழ் மாவட்டத்தில் இருந்து 300 குழந்தைகளும் வடக்கு கிழக்கின் ஏனைய ஏழு மாவட்டங்களிலுமிருந்து மாவட்டத்திற்கு 100 குழந்தைகள் என 700 குழந்தைகள் தெரிவு செய்யப்படுவர்

# தேர்தலுக்கு முன் யுத்தம்; அரசின் முயற்சி தோல்வி

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## தாக்குதலுக்கு திட்டம் தயார் படைகள் தயார் இல்லையாம்

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள விரும்பிய அரசாங்கத்தின் முயற்சி தோல்வி கண்டது. தேர்தலின் முன் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு பெரும் வெற்றியை ஈட்டுவதன் மூலம் தேர்தலில் பயனடையலாம் என்ற அரசின் யோசனைக்கு இராணுவத்தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைக்காமையே இம் முயற்சி தோல்வியில் முடிவுற்றதற்குக் காரணமாகும்.

இது தொடர்பாக புத்திய பத்திரிகையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை வெற்றிகரமாக நடத்தி அந்த வெற்றியை மையமாக கொண்டு தென்மாகாண சபை தேர்தலில் இலகுவாக வெற்றியை ஈட்டிக் கொள்ளலாம் என ஐக்கிய தேசியக் கட்சியினர் நம்பியிருந்தனர். ஆனால் இராணுவ வட்டாரங்களோ யாழ், குடாநாட்டிலும் வன்னிப் பகுதியிலும் மேற்கொள்வதற்கெனப் பல இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் யுத்தம் தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் குறித்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட வில்லை எனவும் இராணுவ தளபாடங்களோ தேவையான ஆயுதங்களோ உரிய இடங்களுக்கு அனுப்பப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டியதுடன் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலை அடுத்து அப் பகுதியில் இருக்கும் இராணுவ பலத்தை முழுமையாக வடபகுதிக்குத் திருப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளது.

அடிக்கடி பாரிய இராணுவ நடவடிக்கைகள் நடைபெறஇருக்கின்றன; அவை படிப்படியாகவே நடைபெறும் என கடந்த 15ம் திகதி கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரிகேடியர் கெமுனு விஜேசூரிய தெரிவித்திருந்தமை தெரிந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கு படைகளை நகர்த்துவது

## 14 வயது மாணவன் மீது ராணுவம் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாவற்கொடிச்சேனை கண்ணகி நகர் முகாம் இராணுவத்தினர் தமிழ் மாணவன் ஒருவரை கைது செய்து கடும் சித்திரவதை செய்த பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றது.

காந்தி நகரைச் சேர்ந்த கருப்பையா தமிழ்வேந்தன் (வயது 14) என்கின்ற தமிழ் மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டவராவார்

## 4 ராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்விற்கு அனுமதி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் மேலும் நான்கு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க ஜனாதிபதி விஜேதுங்கா அனுமதியளித்துள்ளார்.

இராணுவத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு மாற்றங்களின் ஒருபகுதியாகவே இந்த பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. நான்கு உயர் அதிகாரிகளுக்கு மேஜர் ஜெனரல்களாக பதவிஉயர்வு வழங்கப்படவுள்ளன.

## விளையாட்டு வினையாகியது

(தொல்புரம்)

பாடசாலை ஒன்றில் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் செய்முறைகற்றலில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் எரிசோடா கரைசலை (சோடியம் ஐதரொட்சைட்) தெளித்துவிளை யத்தில் ஆண்டு 11 மாணவர்களுக்கான விஞ்ஞான செய்முறை காட்டலை கற்பித்துக் கொண்டிருந்த வேளை செய்முறை காட்டலில் பயன்படுத்தப்பட்ட எரிசோடா கரைசலை மேசையில் உள்ள குமி

## தேர்தல் பிரசாரத்தில் எதிரணி புதிய யுக்தி

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சித் தலைமையிலான எதிரணிக் கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய பாணியிலான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது.

மக்கள் அதிகமாகக்கூடும் இடங்களில் ஒரு சில பழைய டயர்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிவைத்து அதனருகே "இது தேவையாயின் யானைக்கே வாக்குகளை அளியுங்கள்" என்ற வாசகமும் காணப்படுகிறது.

ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலங்களின்போது தென்மாகாணத்தில் பலர் நடுவீதியில் அரச ஆதரவு ஆயுதக் குழுக்களால் டயர் போட்டு எரிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது

## 10,000 பேர் திரட்டும் காமினியின்முயற்சிதோல்வி

(கொழும்பு)

தென்மாகாண சபையைச் சேர்ந்த 10,000 ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அங்கத்தினரை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைக்க காமினி திஸநாயக்கா எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

கடந்த 12ஆம் திகதி காலி நகர மண்டபத்தில் நடைபெற்ற 'யானையும் கழுகும் இணைகின்றன' என்றநிகழ்வு ஒன்றில் இம் முயற்சியில் காமினி இறங்கிய போதிலும் அங்கிருந்த ஆயிரத்திற்கும் குறைவானவர்களே ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் தம்மை ஐ. தே. கவில் இணைத்துக் கொண்டனர்.

இந் நிகழ்வுக்கு வந்திருந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில்பெரும்பான்மையினர் தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல எனவும் இவர்கள் காமினியின் ஆதரவாளர்களான மலையகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த காமினியின் ஆட்சேர்ப்பு நிகழ்வுக்கு பிரதமர் ரணிலும், கட்சியின் செயலாளர் சிறிசேன கூரேயும் வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு குறித்து ஆராய எதிரணிகள் குழு நியமனம்

(கொழும்பு)

தென் மாகாணசபைத்தேர்தலின் போது வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய பொதுசன ஐக்கிய முன்னணியினால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சிரில் ஹேரத், எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலகா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் பொசில் குணசேகர மற்றும் முன்னாள் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக் குழுவினர் தற்போது தென் மாகாணத்தில் தங்கியிருந்து தமது பணிகளை

கரைசலை (சோடியம் ஐதரொட்சைட்) தெளித்துவிளையாடியதில் மாணவி ஒருவரின் கண் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று சுழிபுரம் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியால ... தப்பட்ட எரிசோடா கரைசலை மேசையில் உள்ள குழி ஒன்றில் ஊற்றி குச்சி ஒன்றினால் இரண்டு மாணவர்கள் அதை எத்தி விளையாடிக் கொண்டிருந்த போதே மாணவியின் கண் ஒன்றினுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத்திட்டம் எதையும் சபாநாயகர் கொண்டுவரரார்

### சுமுகநிலை ஏற்படுத்துவதே நோக்கம்

சபாநாயகர் எம். எச். முகமட் தனது யாழ் விஜயத்தின் போது தம்முடன் தீர்வுத் திட்டம் எதையும் எடுத்து செல்லமாட்டார் எனவும் எதிர்கால சமரச முயற்சிகளுக்கு ஒரு சுமுகநிலையை ஏற்படுத்துவதாகவே இவரின் விஜயம் அமையும் எனவும் அதிகார பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சபாநாயகரின் இந்த விஜயத்திற்கு சிறிலங்கா அரசின் அனுமதியும் கிடைத்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு மீனவர்களின் சடலங்கள் கரை ஒதுங்கின

(குருநகர்)

சிறிலங்கா கடற்படையின் கண்மூடித் தனமான தாக்குதலுக்குகடந்தஞாயிறுஇரவு பூநகரி - கல்முனை புதுப்பார் என்றழைக்கப்படும் பகுதியில் இலக்கான மீனவர்களில் காயங்களுடன் கடலில் பாய்ந்த இரு இளம் மீனவர்களின் சடலங்களும் நேற்று காலை கரை ஒதுங்கின.

இருவரது சடலங்களின் தலைப் பகுதிகளும் குண்டு துளைத்து சேதப்படுத்திக் காணப்பட்டன.

பழைய பூங்கா கடற்கரை வீதியைச் சேர்ந்த தங்கராசா ரமேஷ்(வயது 20) என்பவரது சடலத்தில்விலாப்பகுதியிலும் சூட்டுக்காயம் காணப்பட்டது. சடலத்தின் மேல் பகுதி பழுதடைந்து போயிருந்தது.

இவரது சகலம் பூநகரி -

(6ஆம் பக்கம் பார்க்க)

## தங்கப்பதக்கம் வழங்கி துணைவேந்தர் கௌரவிப்பு

(மானிப்பாய்)

கல்விசாரா ஊழியர்களினால் நேற்றைய தினம் நடத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கட்கு கேடயம், தங்கப்பதக்கம் என்பனவழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மங்கள இசையுடன் மேளதாள வாத்தியக் கருவிகள் முழங்க அவரது பாரியார் சகிதம் வரவழைக்கப்பட்டு அவருக்கு கைலாசபதி கலையரங்கில் பிரிவுபசார வைபவத்தினை பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள் ஒன்றிணைந்து நடாத்தின. இவ்வைபவத்தில் ஊழியர் சங்கங்களின்தொழிற் சங்க தலைவர் தனேந்திரன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கு படைகளை நகர்த்துவது கிழக்கில் ஆபத்தை விளைவிக்கும்

### ஐலண்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிழக்கிலிருந்து படைகளை நகர்த்துவது கிழக்குப் பகுதி பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகி விடும் என ஐலண்ட் பத்திரிகையில் வெளியான செய்திக் கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியளவில் கிழக்கிலிருந்து படைகளை வடக்கிற்கு நகர்த்துவது கிழக்கில் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்கு வழி செய்து விடும் என்றும் தற்போது கிழக்கில் காடுகளில் நடாத்தப்படும் இராணுவ நடவடிக்கைகளை இது பாதிக்கும் எனவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைகளினால் வடபகுதியில் உள்ள துருப்புகளை பலப்படுத்தும் வகையில் தொலைத் தொடர்புகளை விருத்தி செய்யவும் நகர்வு, ஆயுதநிலை மற்றும் படையினருக்கான உதவி வசதிகளை அதிகரித்து அதன் மூலம் வடக்கில் விரைவில் தாக்குதலை நடத்த முடியும் என ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தென் பகுதி மாகாணசபை தேர்தல் முடிவடையும் வரையில் பாரிய தாக்குதல் ஏதும் வடக்கில் நடைபெறமாட்டாது எனவும் அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மூன்று இராணுவ நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பம்

### கிழக்கு பிராந்திய ராணுவ தளபதி தகவல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மூன்று இராணுவ நடவடிக்கைகளை தாம் ஆரம்பித்துள்ளதாக பிரிகேடியர் ஜனக பெரேரா தெரிவித்துள்ளார்.

கிழக்குமாகாண இணைப்பதிகாரியான பிரிகேடியர் ஜனக பெரேரா 'திவயின' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்திற்குள் ஊடுருவியதைத் தொடர்ந்தே இத்தகைய இராணுவ நடவடிக்கைகளை சமகாலத்தில் ஆரம்பித்துள்ளதாகவும் இந்நடவடிக்கையில் விசேட இராணுவப் படையணியும் விசேட கொமாண்டோ அணியும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை அக்கரைப்பற்றுப் பகுதியில் இராணுவம் மீண்டும் தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். கடந்த சனியன்று ஆலையடி வேம்புப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடத்தி பல இளைஞர்களை கைது செய்ததோடு, வீதிச் சோதனைகளையும் அதிகரித்துள்ளனர்.

## இனப் பிரச்சினையை தீர்க்க முயலும் கிறிஸ்தவ மதகுழு கனடா செல்லும்

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இறங்கியுள்ள கிறிஸ்தவ மத குழு ஒன்று கனடாவுக்கு செல்லவுள்ளதாக திவயின சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இக் குழுவுடன் அமைச்சர் தொண்டமானும் கனடா செல்லவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குழு கனடாவில் இனப் பிரச்சினை குறித்து பல்வேறு தரப்பினருடன் பேச்சுகளை நடத்தும் குறிப்பாக கனேடிய அமைச்சர்கள் சிலரை இக் குழு சந்திக்கும் எனவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

இக் குழுவில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சிரில் ஹேரத், முன்னாள் விமானப் படைத்தளபதி எயர் ... தென் மாகாணத்தில் தங்கியிருந்து தமது பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## தென்மாகாணத்தில் ஆயுதம் தாங்கிய ஈ.பி.டி.பி.

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலின் போது நடமாடும் இலக்கத்தகடு அற்ற வாகனத்தில் ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் நடமாடுவதாகவும் இவர்கள் நவீனரக ஆயுதங்களுடன்காணப்படுவதாகவும் "லக்திவ" பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈ. பி. டி. பியை முழுமையாக ஏவிவிட்டு தேர்தல் வன்முறையில் ஈடுபட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கான பெரும் தொகையான பணத்தை அதன் தலைவர் டக்லஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இக்குழுவினர் கொழும்பில் இருந்து தென் மாகாணம் நோக்கிச் சென்றுள்ளதாகவும் தொடர்ந்துஅவர்கள் அங்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு சட்ட விரோத ஆயுதம் குழுவின் கைகளில் ஆயுதம் இருப்பது பெரும் ஆபத்தாக முடியும் என்றும் குறிப்பாக சுதந்திர தேர்தலுக்கு அச்சுறுத்தலாக அமையும் என அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது.

## அநுராவின் மீது கூழ்முட்டை வீச்சு

அநுரா பண்டாரநாயக்காவுக்கு தேர்தல் பிரசாரத்தின் போது பழுதடைந்த முட்டை அவர் மீது வீசப்பட்டதால் அவர் தனது தேர்தல் பிரசாரத்தை உடனடியாக கைவிட்டுவிட்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

மேற்படி சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெல பகுதியில் நடைபெற்றது. தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொள்ள மேடையில் ஏறும் போது இச் சம்பவம் இடம்பெற்றதாக மேலும் தெரிய வருகின்றது.

## எதிரணிக்கு வாக்களிக்க பூசா கைதிகள் கோரிக்கை

தென்மாகாண சபைக்கான தேர்தலின்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்குமாறு 'பூசா' முகாமில் உள்ள அரசியல் கைதிகள் தென்மாகாண வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேற்படி கைதிகள் தமது கைப்பட எழுதி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தாம் நீண்டகாலமாக விசாரணை எதுவுமின்றி அடைத்து வைக்கப்பட்டிருப்பதுடன் பெரும் துன்புறுத்தலுக்கும் தாம் ஆளாகுவதாகவும் இந்நிலை நீடிக்காதிருக்க அரசியலில் மாற்றம் ஏற்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்

நல்லூர் பிரதேச நூலகம் மாநகர மன்றம் யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்


**இறைச்சிக்கோழி**

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். சுவையருவி கோழிப்பண்ணை, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8889)

**M. L. T. தேவை**

தகுதி (Qualified) வாய்ந்த மருத்துவ தொழில் நுட்பவல்லுநர் உடன் தேவை; 25-03-94ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்கலாம்; விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, நிர்வாகி, வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை யாழ்ப்பாணம்.

(7806)

**டாக்டர்கள் தேவை**

M B B. S., R. M. P., A. M. P. டாக்டர்கள் யாழ். குடாவிற்குள்ளும், வெளியிலும் (வன்னிப்பிராந்தியம்) இயங்கும் பொது ஸ்தாபனத்தில் கடமையாற்றத் தேவை: 1-4-94ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்; சம்பளம்நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகி, வில்லியம் ஹாவே இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(7815)

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8879)

**உடன் விற்பனைக்கு உண்டு**

டச்சுறோட் 1-ம் ஒழுங்கை சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி எனும் இடத்தில் 5 பரப்பு காணி, நல்ல தண்ணீர் கிணற்றுடன் மா, தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S, கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி-8883)

**மூலிகைகள்**

மூலிகைகள் நோய் வராது காக்கும்; நோய் தீர்க்கும். உணவில் சேர்த்து உண்ணவும் கூடும்; குடியிருக்கும் வளவுகளில் நட்டு வளர்க்க ஏற்ற மூலிகைகள் உள்ளன. மில்க்வைற் நீலசோப் மேலுறை, சவர்க்காரத் தாள் வெறு


# தனக்கென வாழாதவர் டானியல் அன்ரனி

### டிவகலாலா புகழாரம்

(குருநகர்)

''டானியல் அன்ரனி செய்த சேவைகளில் மிகவும் சிறப்பானது; அவன் இந்த மண்ணை நேசித்தது! மண்ணோடு வாழ்ந்தது; மண்ணின் விடிவுக்காக தன்னால் ஆனவைகளைச் செய்ததும்-எழுதியதும்தான்''

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நோய்க்கு சிகிச்சை பெற்று மரணமான பிரபல எழுத்தாளர் டானியல் அன்ரனியின் இறுதி ஊர்வலத்தின்போது நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் கலந்து பேசிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. செபஸ்தியம்பிள்ளை எட்வேட் தலைமையில் இரங்கற் கூட்டம் திங்கள் மாலை 4 மணிக்கு நடைபெற்றது

திரு சு. டிவகலாலாதொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''தனது குடும்பத்தின் பொருளாதார மேம்பாட்டுக்காக சமூக சேவையைப் பயன்படுத்தும் பலரையும் போன்று டானியல் அன்ரனி வாழ்ந்தானில்லை; தனது ஏழ்மையான வாழ்க்கைச் சூழலிலும் நாவாந்துறைக் கிராமத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்ட பண்பட்ட உள்ளம் அவரது'' என மேலும் கூறினார்.

இரங்கல் உரைகளை யாழ். உதவி அரச அதிபர் திரு. க. குணராசா, கலாநிதி சோ. கிருஷ்ணராசா, ஈழநாதம் சார்பில் திரு. இளையவன், மற்றும் திரு. கணேசவேல், திரு. டொமினிக்ஜீவா திரு. நகுலன் ஆகியோரும்நிகழ்த்தினர்.

பத்துக்கும் மேற்பட்ட அமைப்புகளும், தனிக் குடும்பங்கள் சார்பாகவும் அஞ்சலித் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

மறைந்த எழுத்தாளர் டானியல் அன்ரனியின் உறவினரான திரு அருளானந்தம் நன்றி கூறினார். (21)

# தமிழர் சுதந்திர வாழ்வே மாவீரர்களின் கனவு

-அரசண்ணா

''தமிழீழத்தேசிய வரலாற்றிலேயே ஒரு மைல்கல்லாக இம்மாவீரர்களுடைய தியாகம் அமைகின்றது எமது போராட்டம் ஆரம்பம் முதலே எத்தனையோ துன்பங்கள் மற்றும் துயரங்களுக்கு இடையிலேயே வளர்ந்தது: இப்போது ஒரு பாரிய பலமாக வளர்ந்துள்ளது என்றால் இந்த 82 போராளிகளைப் போன்ற 6200 மாவீரர்களுடைய வீரச்சாவினாலேயே ஆகும்இந்த மாவீரர்கள் ஏன் மரணித்தார்கள்? எமது தாய் நாட்டின்மீது வைத்த பற்றினால் மண்மீது பற்றுக்கொண்டதால், மக்கள் மீது பற்றுக் கொண்டதால் தமது உயிரையே சாவு கொடுத்தார்கள்; ஏன் எமது மக்கள் எமது மண்ணிலே சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக'' என இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா தெரிவித்தார்.

சிலாபத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 82 மாவீரர்களுடைய மூன்றாமாண்டு நினைவாக நடத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்

தென்னை, பனை போன்ற வளப்பொருட்கள் உண்டு; ஆனால் தமிழர்களுக்கு தாம் உணவு அனுப்பாவிட்டால் மண்ணைத்தான் உண்ண வேண்டும் என்று டி. பி. விஜேதுங்கா சொல்கிறார்; எமது பரம்பரை பனாட்டு, பழம்சோறு போன்ற சத்து உணவு உண்டு பல ஆண்டு வாழ்வதற்கு ஆயுள் பெற்றது உண்டு. கோதுமைமா பட்டணத்துடன் மட்டும் நின்று விடும். ஆகவே மக்களே எமக்கு உணவுக்காக எதிரியிடம் கையேந்த வேண்டிய தேவை இருக்காது- எமக்கு என்று மண் உண்டு. வளமும் உண்டு ஆனால் எம்மை அடக்கி ஒடுக்கி எமது போராட்டத்தையேஅழிக்க முற்படும் எதிரியை விரட்டி அடிக்க வேண்டும்தென்மராட்சி மாவீரர் பணிமனைபொறுப்பாளர் பதுமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஈகச்சுடரேற்றி ஆரம்பித்துவைத்தார் தொடர்ந்து மாவீரர்களின்பெற்றோர்உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்தனர் அரசண்ணாவின் உரையைத் தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்

# தமிழின் அடையாளமாக உலகில் ஈழத்து இலக்கியங்கள் நிலைக்கும்

- கோமல் சுவாமிநாதன்

(கொழும்பு)

தமிழின் அடையாளமாக ஈழ இலக்கியங்கள் தான் உலகில் நிற்கும் ஆற்றலைப் பெற்று வருகிறது: தமிழகம் இந்தப் பந்தயத்தில் வெகுதூரம் பின்னே நிற்கிறது என்றுதான் இந்த வேளையில் நினைக்கத் தோன்றுகிறது; இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் சுபமங்களா பத்திரிகையின் ஆசிரியரும், நாடக ஆசிரியரும், திரைப்பட இயக்குநருமான கோமல் சுவாமிநாதன் கூறியுள்ளார். வீரகேசரி வார இதழுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் இலக்கியத்தில் அரிச்சுவடி படிக்கின்றார்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் எனக்கு கிடைத்த நாவல்களும், சிறுகதைகளும் என் எண்ணத்தில் ஓங்கி அறைந்தன. அதன் பின் என் மூடத்தனம் அகன்று பரந்துபட்ட அளவில் படிக்க ஆரம்பித்தேன். எல்லாவற்றையும் படித்துவிட்டேன் எனக் கூறமுடியாது; நான் படித்த வரையில் ஈழத்து இலக்கியம் கயிறுகளால் கட்டப்பட்டு கடலுக்குள் அமுத்தப்பட்ட பிரகலாதன் தன் கட்டுக்களை உடைத்து கடலிலிருந்து மாபெரும் சக்தியோடு எழுவதாகவே எனக்குப் படுகிறது. இந்த சக்தி இன்னும் விசுவரூபம் எடுக்கும் என்றே தோன்றுகிறது. உயிர்வாழ்தல் அதுவும் மானத்தோடு உயிர்வாழ்தல், என்ற போராட்டத்தில் அல்லும் பகலும் ஈடுபடும் ஒரு இனத்திடமிருந்துதான் சிந்தனையோட்டத்தின் அடுத்த வெடிப்பு ஏற்படும் என்பது சிந்தனையின் வரலாறு.

# டயஸ் குடியிருப்பில் காய்ச்சல் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

தற்போது இடம் பெயர்ந்தோர் முகாம்களில் பரவி வரும் கொடிய காய்ச்சல் அரியாலை டயஸ் குடியிருப்பில் வசிக்கும் மக்களையும் விட்டுவைக்கவில்லை. சிறுவர் முதல் பெரியோர்வரை அனைத்து தரப்பினருமாக குடியிருப்பிலுள்ள அனேகர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டே உள்ளனர்- காய்ச்சலினால் செபஸ்தி பத்திநாதர் என்ற வயோதிபர் ஒருவர் அண்மையில் உயிரிழந்ததாகவும் குடியிருப்பு வாசிகள் தரப்பில் கூறப்பட்டது- 130 குடும்பங்களைச் சேர்ந்த 496 தியாக மக்கள் மேற்படி குடியிருப்பில் தங்கியுள்ளனர்-

(22)

### மாதிரி அமைப்பு பார்வைக்கு

தியாகச் சுடர் அன்னை பூபதிஅவர்களின் 6ஆம்ஆண்டு நினைவாக யாழ் மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கத்தினரால் யாழ் மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கப் பணிமனையில் உண்ணாநோன்பின் மாதிரி அமைப்பு கடந்த 19ஆம் திகதி தொடக்கம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

### உணவு முத்திரை

(மல்லாகம்)

வறுமை முத்திரை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான உணவு முத்திரைகள் வலி தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்பட்டு வருகின்றன மேற்படிபிரதேச செயலர்பிரிவில்12,500 மாணவர்களுக்கு ஒக்டோபர், நவம்பர் டிசம்பர் மாதங்களுக்கான உணவு முத்திரைகளேதற்போதுவழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (09)

### இன்னும் வழங்கப்படவில்லை

(மல்லாகம்)

சுன்னாகம் ப.நோ.கூ சங்கத்தினரால் சென்ற ஆண்டு யூலை மாதத்துக்குரிய பாடசாலை உணவு முத்திரைக்கான உணவுப் பொருட்கள் இன்னும் வழங்கப்படவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். உணவு முத்திரைக்கான செல்லுபடிக்காலம் முடிவடைந்தபடியால் அம்மாத உணவு முத்திரை விநியோகத்தை மேற்கொள்ள செல்லுபடி காலத்தை நீடித்து தருமாறு அரச அதிபரைக் கோரியுள்ளதாக வலி. தெற்குப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளனர்.

(09)

### இலவச வைத்திய பரிசோதனை

சாவகச்சேரி சத்தியசாயிசேவா சாயிநிலையம் யாழ் மாவட்டத்தில் உள்ள மற்றைய சத்திய சாயி சேவா நிலையங்களுடன் இணைந்து இம்மாத இறுதியிலும் சித்திரை மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தென்மராட்சியிலுள்ள விடத்தற்பளை, பாலாவி, கெற்பேலி, கச்சாய் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு இலவச வைத்திய பரி

### மரவள்ளிக்கிழங்கு திருட்டு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசிக்கும் மக்களால் செய்கை பண்ணப்படும் வீட்டுத் தோட்டங்களில் இருந்து மரவள்ளி திருட்டுப் போவதாக தெரிவிக்கப்படுகின்றது: நள்ளிரவு நேரங்களில் இக்கைவரிசையைக் காட்டும்இரு

### கருத்தரங்கு

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான யாழ். கல்வித் திணைக்களமும் யாழ். மாவட்ட அமெச்சூர்மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து நடத்திவரும் மெய்வல்லுநர் சங்க விதிகள் பற்றிய கருத்தரங்குத் தொடரின் மூன்றாவது அங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரி தம்பையா மண்டபத்தில் நடைபெறும். பொஸ்கோ நிறுவனத்தின் ஆதரவுடன் இக் கருத்தரங்குத் தொடர் நடைபெற்று வருவது தெரிந்ததே.

### கூட்டம்

இன்று மதியம் 12 மணிக்கு இராமநாதன்நுண்கலைப்பீடத்தில் அனைத்து மாணவர்களுக்குமான கூட்டம் கவின்கலை மன்ற ஆதரவில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும்.

# நினைவு கூருகின்றோம்...

## 1994-03-23

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-கிரான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

❋ கே. குமார் (கிரான் - மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்-பண்ணை காவல்நிலைய விடுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**கில்மன்** (பிலிப்புமெதினோ கீர்த்திராஜா - கள்ளிக்கட்டைக்காடு, உயிலங்குளம்-மன்னார்)

**2-ம் லெப். துரை** (மரியாம்பிள்ளை கிறிஸ்ரலோ- முள்ளியான்-வெற்றிலைக்கேணி)

**ராஜ்மோகன்** (அழகக்கோன் யூட் ராஜ்குமார்- பிரதானவீதி, இளவாலை - யாழ்)

**அருணன்** (சிவசுப்பிரமணியம் ரகுராஜன் - கம்டை, மானிப்பாய் - யாழ்)

**பண்டிதர்** (இரத்தினசபாபதி வேணுகோபால்- வேலணை)

1988ஆம் ஆண்டு முத்தையன் கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**லெப். நந்தன்** (தம்பிராசா சிவானந்தன் - கல்வளை, சண்டிலிப்பாய் தெற்கு -யாழ்)

முல்லைத்தீவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**ஜோர்ஜ்** (வில்லியம் றொபேட் - ஈச்சிலம்பற்றை- திருமலை)

1989ஆம் ஆண்டு மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தியாக** (த. உதயராஜ் - மட்டு)

**லெப் றெஜினோல்ட்** (இராசையா சின்னராசா

றை, சனவைத்தூள் வெற்றுப் பக்கற் இருபத்தைந்து அல்லது பணம் ரூ 10- தந்து கன்று ஒன்று பெறவும்-
''மில்க்வைற்'' (இ-8885)

யாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், தாளைய சந்ததி வாழ்கின்ற இடம் எமது தமிழீழத் தாயகமாக இருக்க வேண்டும். எமது மண்ணிலே

பணிமனைப் பொறுப்பாளர் பொன்றியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மாலினி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (86)

க்கு இலவச வைத்திய பரிசோதனையை நடாத்த உள்ளன.

கடும் நோயாளராகக் காணப்படுபவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் அக்கிராமங்களில் பரிசோதிக்கப்படுவர். மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிட்ட கிராமங்களின் கிராமசேவையாளர்களுடனும், அப்பகுதி மருத்துவ மாதுகளுடனும் சாவகச்சேரி சத்தியசாயி சேவா நிலையத்துடனும் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (மு)

நள்ளிரவு நேரங்களில் இக்கைவரிசையைக் காட்டும் திருடர்கள் மரவள்ளித் தடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு கிழங்கை இண்டி எடுத்துச் சென்றுவிடுகின்றனராம். காலையில் தோட்டங்களில் தடிகள் வீசி யெறியப்பட்டுக் கிடக்குமாம். பாடுபட்டு பயிர் வளர்த்து பயன்பெறும் நேரத்தில் அதனை திருடருக்கு காவு கொடுத்து விட்டு எத்தனையோ தோட்டக்காரர்கள் பிரஸ்தாப குடியிருப்பில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (22)

விக்ரர், விக்ரர், விக்ரர், விக்ரர், விக்ரர்



## இசைக்கோர் புதுப்பிறப்பு!

எமது புதிய நிறுவனம்

# விக்ரர்

மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**இன்று (23-03-94) காலை 11.30 க்கும் 12.18 க்கும் வரையுள்ள சுபவேளையில்**

**மங்களகரமான திறப்பு விழா**

எம்மிடம்:

- பழைய, புதிய பாடல்களை ஒலிப்பதிவு செய்யவும்
- அதிநவீன வீடியோ கமராக்களால் படம் பிடித்துக் கொள்ளவும்
- வீடியோ படப்பிரதிகளை ஒளிப்பதிவு செய்து கொள்வதற்கும்
- இலத்திரனியல் பொருட்களை திருத்தி பெற்றுக் கொள்ளவும்

**என்றும் நினைவில் வைத்திருக்க!**

# விக்ரர்

23, தேவா வீதி (மணிக்கூட்டு வீதி) யாழ்ப்பாணம்.

(இ-8891)

## முக்கிய அறிவித்தல்

புலோலி வணிகர் சங்கம்

### பொதுக் கூட்டமும்

புதிய நிர்வாகிகள் தெரிவும்

27-03-1994 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு புலோலி வணிகர் சங்க பணிமனையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான கலந்துரையாடல் இடம் பெறுவதுடன் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். சகலவர்த்தகநிலைய உரிமையாளர்களும் தமது வியாபார நிலையங்களை மூடிவிட்டு தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

இங்ஙனம்

புலோலி வணிகர் சங்க நிர்வாகம்

(7823)

## விசேட பொதுக்கூட்டம்

வடமராட்சி அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சனிக்கிழமை (02-04-1994) காலை 10-00 மணிக்கு நடைபெறும் என அறியத் தருகின்றோம்.

செயலாளர்

(இ-8890) மு. சி. சண்முகராசா

லெப் றெஜினோல்ட் (இராசையா சின்னராசா சர்வோதயவீதி புத்தூர்-யாழ்)

மைக்கல் (சின்னப்பு ஜோன்சன் குயின்ரன்- மணியந்தோட்டம் -யாழ்)

1991-ம் ஆண்டு மன்னார்-சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படைமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

அசோக் (கனகரட்ணம் மோகனதாஸ்-திமிலைதீவு, புதூர்-மட்டு)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தின் மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய,

கப்டன் விக்கி (கப்பையா மகேஸ்வரன்-கல்மடுநகர் குளம்-வவுனியா)

1992-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 7வது தடவையாக மேற்கொண்ட ''ஒப்பரேசன் ஜனபரா'' நடவடிக்கையின்போது ஏற்பட்ட கடுஞ்சமரில் வீரச்சாவெய்திய,

தர்சினி (வனிதா கந்தசாமி-வாழைச்சேனை-மட்டு)

நிலவன் | சிலோக்சன் (சந்தவனம் தேவராஜா-வாகரை-மட்டு)

லெப்.இளமாறன் | பிரியன் (மதிவதனன் தயானந்தன்-மாணிக்க வாசகர்வீதி-திருமலை)

கப்டன் சிறீமதி (சிவகலா துரைசிங்கம்-ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

லெப். நளினி (சாந்தி செல்லையா-முள்ளியவளை -முல்லைத்தீவு)

2-ம் லெப். அழகியநம்பி | கெங்கை (சுப்பிரமணியம் அசோக்குமார்-நுவரெலியா-மலையகம்)

கப்டன் மணாளன்-டயஸ் (சண்முகநாதன் சிறிராம்-சுழிபுரம்-யாழ்)

மான்விழி (சிவகங்கை செல்வராசா-அல்வாய், பருத்தித்துறை-யாழ்)

13-06-1991 அன்று மூதூர், கொட்டியாபுவிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

லெப்.நளன் | செல்லத்தம்பி (செல்வேச்சரம் கணேசலிங்கம்- 6-ம் குடியிருப்பு, கிளிவெட்டி-திருமலை)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

❊ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8884)

# கண்டியில் வெளியார் நடமாட்டம்; கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை

(கொழும்பு)

கண்டியில் வெளியார்கள் எவரும் ஊடுருவியுள்ளார்களா என்பதையறிய பொலிசார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். கண்டியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் எவரும் வெளியார்களை தமது வீடுகளில் பொலிஸ் அனுமதியின்றி தங்கவைத்திருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிசார் எச்சரித்துள்ளனர்.

பொலிசாருக்கு அறிவிக்காது கண்டியில் தங்கியிருக்கும் வெளியாரை கண்டுபிடிக்கும் முகமாக பொலிஸ் அதிகாரி எம். ஏ. ரூபசிங்க தலைமையில் விசேட குற்ற விசாரணைப் பொலிஸ் பிரிவு ஒன்று கண்டி நகரிலும் வர்த்தக மையங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் தேடுதல்களை நடத்தி வருகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு - கண்டிவீதியிலும், பேராதனை வீதியிலும் அமைந்திருந்த இரு வீடுகளில் இருந்து மூன்று வெளியார்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டதையடுத்தே கண்டியில் இத் தேடுதல் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## சுபமங்களா ஆசிரியர் ஏப்ரலில் யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

சுபமங்களா சஞ்சிகையின் ஆசிரியரும், பிரபல நாடகாசிரியருமான கோமல் சுவாமிநாதன் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று அறியப்படுகின்றது.

இம்மாதம் நடுப்பகுதியில் கொழும்பு வந்துசேர்ந்த இவர் கொழும்பிலும், கண்டியிலும், மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களிலும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு விட்டு தமிழகம் திரும்புவதற்கு முன்னர் இவர் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கோமல்சுவாமிநாதன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அரசாங்கத்தின் அனுமதி கிடைத்தால் ஏப்ரல் 5ஆம், 6ஆம் திகதிகளில் வந்து சேருவார் என்றும் அறியப்படுகின்றது. (தி)

## இலவச ஆங்கில வகுப்பு

கண்டி வீதி அரியாலையில் இயங்கி வரும் கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயத்தில் 'றெப்பானா' நிறுவனத்தினால் மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கில வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. பாடசாலை நாட்களில் தினமும் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் ஐந்து மணிவரை நடாத்தப்படும இவ் வகுப்புகளில் விருப்பமுள்ள மாணவர்கள் ஆர்வத்துடன் பயின்று வருவதாக பிரஸ்தாப வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## கண்டெடுப்பு

றோஸ் ஜெயமணி, படரவும வீதி கந்தானை 308531104V என்பவருடைய அடையாள அட்டையும் சிதம்பரப்பிள்ளை மலர்வண்ணன், சங்கோனை, காங்கேசன்துறை 700853225V என்பவருடைய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதற்குரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# தமிழீழம் விடுதலை பெறும் தொடர்ந்து போராடுவோம்

**-மு. வே. யோ. வாஞ்சிநாதன்**

(வடமராட்சி)

எமது தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் இருக்கும்வரை எம்மை எவரும் அழிக்க முடியாது. எமக்கு சுதந்திரம் கிடைக்கும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம். எமது போராட்டம் சுதந்திரத்தை நோக்கி தொடரும். எமது போராட்டம் படிப்படியாக பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. நாங்கள் போராட்டரீதியில வளர்ந்திருக்கின்றோம்.

இவ்வாறு பருத்தித்துறை வட்டத்தில் புரட்டாதி முதல் பங்குனி மாதம் வரையில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் நினைவாக ஆத்தியடிப் பிள்ளையார்ஆலய முன்றலில் கடந்த ஞாயிறு இரவு 8-00 மணியளவில் பொலிகை சிற்றூர் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் கடற்புலிகள் அரசியற்பணிப் பொறுப்பாளர் திரு. யோ. வாஞ்சிநாதன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் 83ல் எமக்கு தமிழீழக்கனவு மலர்ந்தது. 87 முதல் 90 வரையில் வல்லரசுடன் நாங்கள் மோதினோம், எங்கள் கனவு நனவாக மாறியது, அப்போது இங்கிருந்த இந்தியப்படை பெரும் தோல்வியுடன் திரும்பியது அப்போது மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர். ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் சிலர் ஊனமுற்றனர். அது மட்டுமல்ல கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த ஆயுதங்களை விடுதலைப்புலிகளிடம் இழந்தனர்.

87 இல் விடுதலைப்புலிகள் அமைப்பில் 2 ஆயிரம் போராளிகள் மட்டுமே இருந்தனர். இந்தப் போராளிகள் இந்திய இராணுவத்தின் மனநிலையை உடைத்தெறிந்தனர். இன்று எமது அமைப்பில் பல ஆயிரம் போராளிகள் இருக்கின்றனர். இந்தியப்படை மட்டுமல்ல இலங்கைப் படையும் இங்கிருந்து ஓடியது. கோட்டை, கொக்காவில், மாங்குளம், கொண்டச்சி போன்ற பல முகாம்கள் அழிக்கப்பட்டன. ஏன் 1993 இல் முக்கிய இராணுவ தளமான பூநகரியை அழித்திருந்தோம்.

எமது படைப்பலத்தை நாம் மேலும் அதிகமாகப் பெருக்கி தொடங்கிவிட்டோம் என்று தொடங்கிவிட்டோம் போராடித்தான் ஆக வேண்டும்.

இங்குள்ள மாவீரர்கள் உங்களோடு எங்களோடு வாழ்ந்தவர்கள், படித்தவர்கள், ஓடித்திரிந்தவர்கள் இன்று படமாக இருக்கின்றார்கள் இவர்களைக் காணும் போது வேதனைக் கண்ணீர் முட்டுகிறது. அனேகமான மாவீரர்கள் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு தந்தை, அண்ணா, அக்கா, தாய் போன்றோர் இல்லை. இந்த ஆயுதப் போராட்டத்தின் மூலம்பல நாடுகள் தமது தேசியக் கொடியை ஏற்றி உள்ளன.

இந்த மாவீரர்களுக்கு தீபம் ஏற்றி மாலை யிடுவது அஞ்சலியல்ல. தமிழீழத்தை பெறுவதே உண்மையான அஞ்சலி. அதற்காக நாம் அனைவரும் போராட ஒன்றுபட வேண்டும் என்றார்.

தொடர்ந்து கடற்புலிகள் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. வசிகரன், மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரூபா ஆகியோரும் நினைவுரையாற்றினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இதற்கு முன்னதாக ஈகச்சுடரை வடமராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் திரு. செல்வன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் உருவப்படங்களுக்கு பெற்றோர் உறவினர் மாலை அணிவித்து தீபம் ஏற்றினர். (மோ)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மார்ச் மாத கொடுப்பனவு 21-ம் திகதி திங்கள் தொடக்கம் அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுவதாக அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

## கண்டெடுப்பு

தர்மலிங்கம் வாசுதேவன் என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களுக்கான 1994ஆம் ஆண்டு ஜனவரி மற்றும்பெப்ரவரி மாதங்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவுகள் எதிர்வரும் புதன் வியாழன்ஆகிய இரண்டு தினங்களும் காலை 9மணி முதல் பிற்பகல் 2மணி வரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக லங்கா சீமெந்து நிறுவனக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

## பிரத்தியேக

# வடக்கு - கிழக்குப் பறிபோனதுபோல் மலையகமும் பறிபோகும் அபாயம்

## இனவாதம் கக்குகிறார் பூமிபுத்திர கட்சி தலைவர்

(கொழும்பு)

நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசம் இன்று பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு இல்லாமல் போய் விட்டது. அதே போன்று மலைநாடும் சிங்கள மக்களுக்கு இல்லாமற் போய்விடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறு தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் பூமிபுத்திர கட்சியின் தலைவரான ஹரிச்சந்திர விஜேதுங்கா தெரிவித்தார். இக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் முகமாக ரத்கமவில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தமது கட்சியை பாதுகாத்துக் கொள்ளமுடியாத சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் நாட்டை நல்வழிப்படுத்த அதிகாரத்தைக் கேட்கின்றனர். ஐ. தே. கவும், சுதந்திரக் கட்சியும் ஏனைய அரசியல் கட்சிகளும் தமக்கு அரசியல் அதிகாரம் கிடைப்பதற்காக பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் வாக்குறுதிகளைத் தான் முன்வைத்துள்ளன. ஆனால் எமது கட்சி கொள்கைகளைத்தான் முன்வைத்து இருக்கிறது. எமக்கு சுதந்திரம் கிடைத்ததற்குப் பின் இந்த நாட்டை ஆட்சி புரிந்த கட்சிகளும் முன்னணிகளும் தமக்கு அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தம் செய்துகொண்டு கைச்சாத்திட்டதால் வடக்கும்-கிழக்கும் சிங்களவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. சிங்களவர்களின் உரிமைகளைப் பற்றிப் பேசினால் இனவாதத்தை கிளப்புவதாகக் கூறுகிறார்கள். நாங்கள் எமது உரிமைகளைப் பற்றிப் பேசினால் இனவாதம் கிளப்புவதாகக் கூறுகிறார்கள். நாங்கள் எமது பிரச்சினைகளைப் பேசினால் அது இனவாதமாகுமா? எனவும் வினா எழுப்பினார்.

## இன்றைய நிகழ்வு

(குருநகர்)

அளவெட்டிதெற்குநாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில்இன்று ஏகாதசி தீர்த்த விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது (21)

ஃ ஃ

(வடமராட்சி)

வடமராட்சி மக்களினால் யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்து ஓய்வுபெற்ற திரு. அ. துரைராசா அவர்களுக்கு சேவை நலம் பாராட்டு வைபவம் ஒன்று நடைபெறவுள்ளது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பிற்பகல் 2.00 மணியளவில் பாடசாலை அதிபர் திரு. க. யோகானந்தா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி பிரதி கல்விப்பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் கலந்து கொள்வார் சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் வி. கணேசராசாவும் கோப்பாய் வட்டார பொறுப்பாளர் திரு. சோழன் அவர்களும்கலந்து கொள்வர்.

---

31-வது நாள்

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 12-10-30

இறப்பு: 22-02-94

**திருமதி மேரி இராசமலர் நவரத்தினம்**

இரக்கமுள்ள இறைவா! நீர் உம்மிடம், அழைத்துக்கொண்ட திருமதி மேரி இராசமலர் நவரத்தினம் என்பவ இறையருளின் பற்றாகி, ஏழைகளின் நட்பாகி, சேவைகளில் சிறப்பாகி, இரக்கத்தின் செயலாகி, தியாகத்தின் உயர்வாகி, அன்பிலே நிறைவாகி, ஆறுதலில் உவப்பாகி, ஒற்றுமையின் வடிவாகி, மன்னிப்பின் மாண்பாகி, மகிழ்வின் ஒளியாகி, சமாதானத்தூதாகி, நட்புறவின் விழிப்பாகி, எம்மத்தியில் வாழ்ந்துவந்துள்ளா இவளின் பாவங்களை மன்னித்து, நித்திய பேரின்ப வீட்டில் இடமளிக்குமாறு உம்மைத் தாழ்மை

## பிரத்தியேக வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்- சன்மார்க்கமகா வித்தியாலயத்தில் இயங்கி வரும் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பிற்பகல் வேளைகளில் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாகபரீட்சைகளில்குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கென நடாத்தப்படும் இவ் வகுப்புகள் திங்கள், வெள்ளிக் கிழமைகளில் 7ஆம் 9ஆம் ஆண்டுகளிற்கும் புதன் கிழமைகளில் க. பொ. த. (சாதாரணதர) வகுப்புக்கும் பிற்பகல் 2. 30 மணி தொடக்கம் 4.30 வரை நடாத்தப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் திருமதி கே. பாலசிங்கம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

சிங்கள மக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை எல்லாம் சிறுபான்மை மக்களுக்கு வழங்க முயற்சி எடுத்துவருகின்றன.

## தளபாடங்களுக்கு பற்றாக்குறை

திவக மக்கள் தங்கியிருக்கும் அரியாலை மணியரசன் குடியிருப்பில் இயங்கும் 'கற்பகம்' பாலர் பாடசாலையிலும், டயஸ் குடியிருப்பில் இயங்கும் பாலர் பாடசாலையிலும் தளபாடப் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் டயஸ் குடியிருப்பில் உள்ள பாலர் பாடசாலைக்கென தனியான கட்டடமே இல்லையென்றும் குடியிருப்பில்இயங்கும்'டில்லி' (செல்வி) முதலுதவி சிகிச்சை நிலையத்திலேயே தற்போது பாலர் பாடசாலை இயங்கி வருவதாகவும் அதன்ஆசிரியை தெரிவித்தார். (22)

...நடைபெறவுள்ளது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு இவ் வைபவம் இடம்பெறும்.

(யோ)

ஃ ஃ ஃ

(குருநகர்)

யாழ்-பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் அருட்செல்விகொஸ்கா தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக யாழ் உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. இரா அருளானந்தம், சிறப்பு விருந்தினராக பங்குத்தந்தை வண-தி. ஜெயக்குமார் அடிகளாரும் கலந்து கொள்வர். (21)

ஃ ஃ

யாழ் - நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசா...

...ந்து கொள்வர்.

ஃ ஃ ஃ

முனையடுவார் நாயனார் குருபூசை வழிபாடும், கருவூர்த்தேவர் நினைவுரையும் யாழ் மெய்கண்டதேவர் ஆதீனத்தாரால் இன்று முற்பகல் ஒன்பது மணியளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஃ ஃ ஃ

யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் அமரர் டானியல் நினைவு தினம் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி நா. சுப்பிரமணியன், பேராசிரியர் அ சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

# கடல் தொழிலாளர்களின் உயிருக்குபாதுகாப்புஇல்லை

## மீன்பிடி அபிவிருத்தி அதிகாரி

(குருநகர்)

''கடல் வலயச் சட்டம் எடுக்கப்பட்டாலும் சரி, எடுக்கப்படாவிட்டாலும் சரி தமிழ்பேசும் கடற்றொழிலாளர்களின் உயிர்களுக்கோ, உடைமைகளுக்கோ உத்தரவாதம் எதுவும் இந்தப் போர்க்கால சூழலில் இல்லை''

ஆனைக்கோட்டை, உயரப்புலம் கடற்றொழிலாளர் சங்கம் அங்குரார்ப்பண வைபவம் கடந்த வியாழக் கிழமை அன்று கொக்குவில் கிராம சேவையாளர் பணிமனையில் நடைபெற்ற பொழுது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் மீன்பிடி இலாகா அபிவிருத்தி அதிகாரி திரு. யோசெப் மேற் கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:

''வடபகுதியிலுள்ள மீன்பிடி இலாகாவிற்கு தனிச் சிங்களத்தில் வந்த 20பக்கங்களைக் கொண்ட கடிதம் எம்மைத் திகைப்பில் ஆழ்த்தியது அதில் தமிழ் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

சிங்களப் பிரதேசத்துபெண்கள் ஆற்றில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள் எமது தமிழ்ப் பெண்களும் கடல் சார்ந்த தொழிலில் ஈடுபடுவது நல்லது. போராட்டச் சூழலில் உயிரைப் பணயம் வைத்து சகலரும்உழைக்கவேண்டியதேவை இன்று ஏற்பட்டுள்ளது'' என்றார் (21)

...எமது படைப்பலத்தை நாம் மேலும் அதிகமாகப் பெருக்கிக் கொள்வோமேயானால் முகாம்களை அழிப்பது எமக்கு ஒரு பெரும் பொருட்டல்ல.

இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்தபோது இந்தியத் தூதுவர் டிக்சிற் எம்மையும் எமது போராட்டத்தையும் எதிர்த்தார். எம்மை அழிக்க முயன்றார், எம்மீது வேண்டாதவற்றை திணித்தார், இவரின் நடவடிக்கையினால் தான் திலீபன், குமரப்பா, புலேந்திரன் போன்றோர் இறக்க நேரிட்டது. ஆனால் இன்று எமது படையையும், படைத்தலைவனையும் பாராட்டுகின்றார். எமது தலைவரை தமிழினத்தின் தலைவன் என்று இன்று ஏற்றுக்கொள்ளுகின்றார். இந்தப் படையோடு மோதமுடியாது என்று தற்போது கூறியிருக்கிறார் எங்களை சண்டைக்காரர்களாகவும் பலூன் என்றும் கருதியவர் இன்று அவருக்கு எமது போராட்ட வடிவம் நன்றாகப் புரிந்திருக்கிறது.

இதற்கெல்லாம் காரணமாக இருந்தவர்கள் தான் இன்று உருவப்படங்களாக இங்கே இருப்பவர்கள். இவர்கள் தனது உயிரை உறவை வெறுத்து மண்ணுக்காக புறப்பட்டவர்கள். இவர்கள் இறக்கும் வயதா இது? இவர்கள் போக வேண்டியவர்களா? இவர்களுக்கு நாங்கள் இப்படி மாலை போட்டு பார்க்க வேண்டுமா?

இந்த அரசாங்கம் கடந்த இருபத்தியிரண்டு ஆண்டுகளில் 40 ஆயிரம் மக்களை கொன்றுள்ளது. இவர்கள் என்ன ஆயுதங்களை ஏந்தினார்கள்? இதனை சகிக்க முடியாத நாங்கள் எமது இனத்திற்காக இரத்தத்திற்காக குரல் கொடுப்பது தவறா? பாரதப்போர் தர்மத்திற்காக நீதிக்காக நடத்தப்பட்டது. போர் என்றால் கையில் வேல், அம்பு எடுக்கத்தான் வேண்டும். நாங்கள் ஆயுதம் எடுத்துவிட்டோம் போர்


## O/L பரீட்சையில்

சித்தியடைய தவறிய பாடசாலை செல்லமுடியாத மாணவர்க்கான

## பகல் நேர வகுப்பு
## DAY CLASSES

திங்கள், செவ்வாய், வியாழன, வெள்ளி காலை 8-00— பிற்பகல் 1-00

சனி, ஞாயிறு நாட்களில்

மேலதிக கணித வகுப்புகள்

**ஏப்ரல் 4 முதல்**

பெயர்களை உடனே பதிந்து இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

ESTD:-1973 REGD: No. J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

(சி-8886)


...வந்துள்ளார் இவரின் பாவங்களை மன்னித்து, நித்திய பேரின்ப வீட்டில் இடமளிக்குமாறு உம்மைத் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறோம்.

### வெண்பா

ஆரா, அமுதே! அருமைத் தாய்மலரே!
பேரான வாழ்வென்றோ, போய்விட்டாய்- சீராளே!
இந்தத குளிர்நிலத்தை, தேன்நிலவே? உன்முகத்தை,
எந்தநாள் காண்போம், இனி!

### விருத்தம்

பல்வரிய பண்பாடி, வல்லபரன்! நல்லருளைப்
பற்றிப் பிடித்தங்கே, பாதநிழல் சென்றடைந்த,
நல்லறிவே, நற்துணையே, ஞானமணிப் பெட்டகமே,
நாளாந்த, நற்புறவில், நலம்பேணிக் காத்தவளே
இல்லொளியே, இங்கிதமே, இராசமலர்ப் பூங்கரமே,
இறையரசின் நீயிணைந்து, இன்பசாந்தி பெற்
றிலங்க,
நல்வரிய, வான்வீட்டில், நாண்மலராய்ச் சேர்ந்திருக்க,
வல்லகுரு! வேந்தனவர்! வரம்பொழிவார்! உந்
தனுக்கு;
உற்சாகம், உளத்துடிப்பு உயர்பண்பு உரிமைகொள்ள
ஊறிவந்த பெருமைகளை உதறிவிட்டுச் சென்ற
வளே,
பெற்றெடுத்த பொன்மலரே, பேணிவைத்த பொற்
குடமே,
பற்பல பிழைபொறுத்துப், பரிமளிக்க வைத்தவளே
நற்தவத்தால் நல்லறங்கள் நாளாந்தம் புரிந்தவளே,
நற்பத்திச் சபைகளிலே நாடிநலம் மொழிந்தவளே
பற்றறுத்துப் பரகதிக்குப், பக்குவமாய் பறந்தவுந்தன்
பாவங்கள் பொறுத்திருக்கப் பரம்பொருளை!
வேண்டுகிறோம்;

இவரின் ஆன்மசாந்திக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 24 - 03 - 94 காலை 6. 15 மணிக்கு திருப்பலியும் மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் பங்குபற்றி இவரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

இராஜஸ்தான் மிருசுவில்

சகோதரன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(7818)

# மாகாண சபை அமுலாக்கத்தினால் பெரும் நிதி வீண் விரயம்

## - உலக வங்கி குறை கூறுகிறது

(கொழும்பு)
இலங்கையின் மாகாண சபை அமுலாக்கத்தினால் நிதி வீண் விரயமாக்கப்பட்டு வருவதாக உலகவங்கியினால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிர்வாக அமைப்பு முறையில் மாகாண சபை என்றும் மாவட்ட செயலாளர் காரியாலயங்கள் என்றும் இரண்டு நிர்வாக அமைப்புக்கள் ஒரே வேளையில் செயற்படுகின்றது என்றும் இதனால் பெருமளவு நிதி அநாவசியமாகச் செலவு செய்யப்படுகின்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிர்வாக சபை அமைப்புக்களும் ஒன்றாக்கப்பட்டு ஒரே நிர்வாக அமைப்பாக இயங்கினால் அநாவசியமாக நிதி வீண் விரயமாக்கப்படுவதை தவிர்க்க முடியும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதும் அநாவசியமான செலவுகளை அதிகரிக்கும் என்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றுபவர்களுக்கு சமமான எண்ணிக்கையில் மாகாண சபையிலும் கடமையாற்றுகின்றார்கள் மத்திய அரசாங்கத்தின் மொத்த செலவீனங்களில் 1/8 முதல் 1/10 வரையிலான செலவுகள் மாகாண சபைகளினாலேயே ஏற்படுகின்றன. இவற்றில் அதிகளவு பணம் வாடகை, மற்றும் சம்பளக் கொடுப்பனவு தொடர்பானது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட மாகாண சபை ஊழியர்களின் சேமலாபக் கொடுப்பனவு, மற்றும் ஒதுக்கீட்டுப் பிரிவுகளின் கொடுப்பனவு ஆகியனவும் அதிகமாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே வேளை அனைத்து மாகாணசபைகளிலும் சுகாதார சேவை ஊழியர்களுக்கான செலவீனங்கள், மருந்து வழங்கல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய வசதிகளுக்கான செலவீனங்கள் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போசாக்குக் குறைவே செப்ரிசீமியாவிற்கு காரணம்

(யாழ்ப்பாணம்)
ஒருவித வைரஸ் கிருமியினால்தான் செப்ரிசீமியா நோய் ஏற்படுகிறது. போசாக்கின்மைதான் இந்த நோய் ஏற்படுவதற்கான காரணம்.

இவ்வாறு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் போசாக்கின்மையால், குழந்தைகளிலிருந்து பெரியோர் வரை பலர் நலிவடைந்துள்ளனர். இந்த மாதிரியானவர்களுக்கு செப்ரிசீமியா இலகுவில் ஏற்படக்கூடும்.

ஒருவித வைரஸ் கிருமிகளே இந்த நோய்க்கான காரணமாகும். இக்கிருமிகளின் தாக்கத்தை எதிர்க்கக் கூடிய சக்தியிருந்தால் செப்ரிசீமியா இலகுவில் ஏற்படாது என மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்த நோயினால் யாழ். மாவட்டத்தில் ஐம்பதிற்கும திகமானோர் இறந்துள்ளனர் என்றும் இந்த நோயைக் கட்டுப்படுத்த யாழ், வைத்தியசாலை தீவிர நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# 26 ஆங்கில ஆசிரியர் பயிற்சிகள் முடிவடைந்தன

(யாழ்ப்பாணம்)
சேவைமுன் பயிற்சி பெற்றுவந்த சுமார் 26 ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிகள் முடிவடைந்து விட்டன. என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான ஆசிரிய நியமனங்கள் கல்விச் சேவை சபையினால் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளன. இவர்களுக்கு நியமனக் கடிதங்களும் மிகவிரைவில் கல்விச் சேவை சபையினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இவர்களுடைய பெயர்ப் பட்டியல் யாழ். கல்வித் திணைக்கள வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராசா கொழும்பு சென்று கல்விச் சேவை சபையிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

அத்துடன் மேலும் சுமார் 60 பேரிற்கு மேற்படி பயிற்சி வழங்குவதற்கான அனுமதியையும் அவர் கோருவார் என தெரிய வருகின்றது. (பா)

எரிபொருள் பற்றாக்குறை;

# யாழ். செஞ்சிலுவையின் செயற்பாடு பாதிப்பு

## சேவைநலன் பாராட்டு

(பருத்தித்துறை)
பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தின் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றி 36வருட அரசசேவையிலிருந்து இளைப்பாறியதிரு. க. சரவணமுத்துவின் சேவைகளைப் பாராட்டி பருத்தித்துறை கோட்ட கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. பி. இளையதம்பி தலைமையில் சேவைநலன் பாராட்டு விழாவை நடாத்தியது. இச்சேவைநலன் பாராட்டு விழாவிலே பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திரு. ச. செல்லத்துரை திரு. வி. சே. ஏகாம்பரநாதன் உட்பட இன்னும் பலர் பாராட்டுரைகளை நிகழ்த்தினர். இளைப்பாறிச் செல்லும் திரு. சரவணமுத்து நன்றி தெரிவித்து உரையாற்றினார். (25)

## மெய்வல்லுநர் போட்டி

மறவன்புலோ சகலகலாவல்லி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

ºº ºº

யாழ் / வண் நாவலர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. அதிபர் ஐ. துரைராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கு யாழ் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். அருணானந்தம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

## விவசாய பீடாதிபதியாக நவரட்ணராஜா

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி விவசாய பீட பீடாதிபதியாக கலாநிதி யான நவரட்ணராஜா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் கிளி

# யாழ். மருத்துவ பீடத்திற்கு 19 தமிழ் மாணவர்கள் வர மறுப்பு

(கொழும்பு)
பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கடந்த கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்ட 19 தமிழ் மாணவர்கள் யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்குச் செல்ல மறுத்துள்ளனர். இந்த 19 தமிழ் மாணவர்களும் தாம் கொழும்பு அல்லது யாழ். தவிர்ந்த பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க இடவசதி செய்து தருமாறு பல்கலைக்கழக ஆணைக்குழுவிடம் விண்ணப்பித்துள்ளனர்.

இப் பத்தொன்பது மாணவர்களை தென்பகுதி பல்கலைக்கழகங்களில் சேர்ப்பதினால் சிங்கள மாணவரின் இடவசதி பாதிக்கப்படும் என்றும் தென்பகுதி மாணவர்களுக்கான சந்தர்ப்பம் வடபகுதியினரால் பறித்துக் கொள்ளப்பட நேருமெனவும் சிங்களப் பெற்றோர்கள் பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு முறையிட்டுள்ளனர். இத் தமிழ்மாணவர்கள் தென்பகுதி பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்படுவார்களானால் அது நீதிவிரோத செயலாகும் என சிங்களப் பெற்றோர்கள் எதிர்ப்புக் காட்டியுள்ளனர்.

கடந்த முறையும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஏழு மாணவர்களுக்கு தென்பகுதியில் இடமளிக்கப்பட்டிருந்தது.

## மலேரியா கொடிய நோயாக மாறிவருகிறது

### -கருத்தரங்கில் உரை

(தொல்புரம்)
பல வருடங்களுக்குப்பின் குடாநாட்டில் அண்மையில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளநீரினாலும், போர்க்கால சூழ்நிலையினால் ஏற்பட்ட சீரற்ற போக்குவரத்துக்களாலும், இதுபோன்ற மாறுபட்ட சூழ்நிலைகளாலும் மலேரியாநோய் அதிவேகமாக பரவிவருகிறது. இது ஒரு கொடிய நோயாக மாறி மனிதகுலத்தின் மத்தியில் இன்று பயங்கரரூபத்தை கொடுத்துள்ளது.

இவ்வாறு மானிப்பாய் பொதுசுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் திரு. க. செல்வராசா அவர்கள் கடந்த சனிக்கிழமை அன்று தொல்புரம் அமெரிக்கமிசன் பாடசாலை மண்டபத்தில் வலிமேற்கு பிரதேச செயலாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டு, திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் திருமதி சி. ராணிரத்தின தேவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மலேரியாத் தடுப்பு வாரத்தினையொட்டிய மலேரியா ஒழிப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வன்னிமாவட்டத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து குடாநாட்டினுள் வசிப்பவர்களினாலும், அடிக்கடி வன்னிப்பகுதிகளுக்கு சென்று வருபவர்களினாலும், இந் நோய்க்காவியான நுளம்பு நன்நீர் நிலைகளில் பெருகுவதனாலும் எமது மக்கள் மலேரியா நோயினால் அதிகளவு பாதிக்கப்படுகின்றார்கள். மனித உயிர் முக்கியத்துவமானது என்பதை ஒவ்வொரு பிரஜைகளும் புரிந்து கொண்டு இந்த விடயத்தில் புரிந்துணர்வுடன் செயல்பட்டு அனைவரும் சுற்றாடல் சுகாதாரத்தினை பேணிப்பாதுகாக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (41)

## துறைமுகப்பகுதி திருத்தப்படுகிறது

(வடமராட்சி)
கடந்த வருடம் பெய்தபெருமழை கடல் அலையினால் சேதமடைந்த பருத்தித்துறை துறைமுகப்பகுதி திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (யோ)

## மாதாந்த கொடுப்பனவு

(மல்லாகம்)
வலி தெற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவில் பெப்ரவரி மாத கொடுப்பனவு தபாற்கந்தோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக வலி தெற்குப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (09)

## புதிய கப்பலில் நோயாளர் வருவர்

(வடமராட்சி)
கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 30ஆம் திகதி 'பிளம் போலன்' என்ற கப்பலில் நோயாளிகள் யாழ் நோக்கி வரவுள்ளனர். இவர்கள் நேராக பருத்தித்துறைக்கு வருகின்றனர்.

'நரோமா' கப்பலில் 24, 26ஆம் திகதிகளில் இந்தியாவிலிருந்து அகதிகள் பருத்தித்துறைக்கு வருகின்றனர். இக் கப்பலில் இங்கிருந்து பயணிகள் செல்லவுள்ளனர். (யோ)

# அன்னைபூபதி நினைவாக தென்மராட்சியில் நிகழ்வு

(தென்மராட்சி)
தியாகதீபம் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவினை முன்னிட்டு தென்மராட்சிப் பகுதிகளில் இல்லங்கள், வர்த்தக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் தோறும் பந்தல்கள் அமைத்து உருவப்படத்தினை வைத்து தீபங்கள் ஏற்றப்பட்டு வீதிகளில் பனர்கள், வளைவுகள், சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

பளை, மாசார், கிளாலி, பண்டிதர் குடியிருப்பு, எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரி, நுணாவில், கைதடி, நாவற்குழி போன்ற இடங்களிலேயே இவ் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன பாடசாலைகளிலும் இந் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது இதே வேளை பல அகதி முகாம்கள், வைத்தியசாலைகள் இந்த அன்னைபூபதியம்மாவின் நினைவில் கிரமதான மூலம் புனரமைக்கப்படவும் உள்ளது. அத்தோடு வட்டவரீதியாக பல நிகழ்வுகளும் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன இதில் பாடசாலை மாணவ மாணவிகளும் பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்து வருகின்றனர்.

# சித்த மருத்துவ முறைகள் எமதுபண்பாட்டுக்கு ஏற்றது

### பாலசுப்பிரமணியம் தெரிவிப்பு

(யாழ்பாணம்)
எமது பண்பாடு, கலாசார வாழ்க்கை முறைக்கு அமைவாக அமைந்ததுதான் சித்த மருத்துவம். உலக சுகாதார ஸ்தாபனம் சித்த மருத்துவம் முதலிய மாற்றுமருத்துவ துறைகளின் அவசியத்தை 1966ஆம் ஆண்டுமாநாட்டில் வெளிப்படுத்தியது; அன்று தொடக்கம் மாற்று மருத்துவ துறைகளை விரிவுபடுத்துவதிலும், அதன்மூலம் உலக மக்... யுரை நிகழ்த்திய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், தமிழருடைய தனித்துவமான சித்த மருத்துவம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையை 1982 இல் மூன்றாவது உலக மாற்று மருத்துவ மாநாட்டில் சமர்ப்பித்து, அதன் மூலம் சித்த மருத்துவம் மாற்று மருத்துவக் குழுவில் இடம் பெற்றது என்றார்

அடுத்துப்பேசிய மில்க்வைற்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக்கு எரிபொருள்களை வழங்க பாதுகாப்பு நடவடிக்கை பணியகம் பின்னடிப்பதை தொடர்ந்து அதன் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இச்சங்கத்தின் வாகனங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள்களின் கையிருப்பு குறைந்து விட்டதாகவும் இதனால் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் வைத்திய சேவை மற்றும் அத்தியாவசியதேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகன சேவையை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சங்க பிரதிநிதி பொருவர் எரிபொருள் பெறுவது தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைப்பணியகத்துக்கு பல தடவை விண்ணப்பித்த போதும் எதுவித பலனும் கிட்டவில்லை எனவும் இதனால் மற்றோர் அதிகாரியிடம் இதை ஒப்படைத்து விட்டு மேற்படி அதிகாரி யாழ்ப்பாணம் திரும்பி விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## 1ம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



மண்ணமர்வு:

09-07-1979

விண்ணமர்வு:

03-04-1993

### செல்வி பரணிதா கிருஷ்ணபிள்ளை

திதி: 23-3-94

தங்கையெனப் பொங்கிவந்த பாசத்தைத்தந்தோமே
இங்கிதயம் பிளந்தவறை எம்மைவிட்டுப் போனவளே
நாளெல்லாம் பரணியென அழைத்தனாய்
மூடிவிட்டோம்
ஊழிந்த வாறென்றால் எம்மால் முடிவதுண்டோ?
உன் பிரிவால்துயருறுகிறோம். அரனடியில் அமைதி
பெற வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர்.

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

(5875)

நொச்சியில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நவரட்ண ராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அளிக்கப்பட்ட 17 வாக்குகளில் 9 வாக்குகள் நவரட்ண ராஜாவிற்கு கிடைத்தன எனத் தெரிவிக்கப்பட்டது

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(வடமராட்சி)

வேலணை வடக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் முகிலன் என்பவரது அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு நாவற் கோவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரிவுச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துடன் பெறுமதியான உடைமைகளும் எடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி மேற்படி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (வோ)

லும், அதன்மூலம் உலகமக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதிலும் அக்கறை காட்டப்பட்டு வருகின்றது. இரண்டாயிரம் ஆண்டளவில் உலக மக்கள் அனைவருக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை நிறைவேற்றுவதற்கு அந்தந்த நாட்டுக்குச் சொந்தமான மருத்துவ முறைகளின் ஊடாகச் செயற்படுத்தி வருகின்றது. இவ்வாறு வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற பயிலுநர் சான்றிதழ் வழங்கும் விழாவில் தலைமை

அதிபர் க. கனகராசா, ஆங்கில மருந்துகளை இறக்குமதி செய்வதற்குப் பணத்தை வீணாக்காமல் எமது மண்ணில் காணப்படும் சகல மூலிகைவகைகளையும் நாம் பயன்படுத்த வேண்டும். மலேரியாவுக்கு வேம்பில் இருந்து தயாரிக்கப்படும் சித்த மருந்துகள் நல்ல பலனளிக்கின்றன. சித்த மருந்து வகைகள் பின் விளைவோபக்கவிளைவோ அற்றவை என்று தெரிவித்தார்.

தி. சபாரத்தினம் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## உணவுமுத்திரைபொருட்கள் விநியோகத்தில் பாரபட்சம்

- வியாபாரிகள் புகார்

(மல்லாகம்)

உணவு முத்திரைகளுக்கான பொருட்களை விநியோகம் செய்த உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு மீள விநியோகப் பெறுமதிக்கான பொருட்களை வழங்க சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் பின்னடிப்பதாக, உத்தரவு பெற்ற வியாபாரிகள் வலி தெற்குப் பிரதேச செயலாளரிடம் புகாரிட்டுள்ளனர். தை மாசி மாதங்களுக்கான உணவுப் பொருட்களை வழங்கிய பின் முத்திரைகள் சங்கத்திடம் ஒப்படைத்தும் ஐம்பது வீதமான பெறுமதி மட்டுமே மீள தரப்பட்டிருப்பதாகவும், அரசு உணவுப்பொருட்கள் தரவில்லை என காரணம் கூறப்படுவதாகவும்இவ்வியாபாரிகள்மேலும் தெரிவித்தனர்.

உணவு முத்திரைப்பொருட்கள் விநியோகிக்கும் உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு சீராக உணவுப் பொருட்கள் சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென அரச அதிபர் பணிப்புரை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (09)

## 31-ம்நாள் நினைவஞ்சலி

திருமதி
சின்னத்தங்கம் சீனிவாசகம்

மலர்வு: 16-04-1920

உதிர்வு: 21-02-1994

ஆறாத்துயரில் எம்மைஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொள்ள விண்ணுலகெய்திய எம்உயிர்த்தெய்வமே-அம்மா! தாயில்லாப் பிள்ளைகளாக எம்மைத் தரணிதனில் தவிக்கவிட்டு மீளாத் துயில்கொள்ள நெடுந்தூரம் சென்றதென்ன? அம்மா.

உள்ளக் குமுறலுடன் எம் கண்ணீர்ப் பூக்களை உங்கள் பாதத்தில் தினம் தினம் சொரிகின்றோம்.

துணைச்சை,
அல்வெட்டி மத்தி.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

(7786)

## நில அளவையாளராவதற்கான பயிற்சி

அரச நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம் வழங்கவுள்ளது. இப் பயிற்சியினைப் பெறவிரும்பும் கீழ்க் காணும் தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. கல்வித்தகைமை:

i) க. பொ. த. (உயர் தரம்) கணிதம் உட்பட 3 பாடங்களில் சித்தி - அல்லது

ii) க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம், பௌதிகம் உட்பட 6 பாடங்களில் திறமைச் சித்தி - அல்லது

iii) நில அளவைத் துறையில் குறைந்தது 3 வருடம் அனுபவமும், க. பொ. த. (சாதாரண தரம்) கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி. - அல்லது

iv) தொழில் நுட்பக்கல்லூரியில் படவரைஞர் சான்றிதழ் உள்ள, க. பொ. த. (சா/த) கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அல்லது

v) மேற்கண்ட தகைமைக்கு உயர்வான தராதரம் உடையவர்கள்

2. வயதெல்லை, 17 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

3. பயிற்சிக்காலம்: 6 மாதம்

4. விசேட பயிற்சி: 6 மாத பயிற்சி முடிவில் திறமையான முதல் 30 பேருக்கு தொடர்ந்து 6 மாதம் விசேட பயிற்சி அளிக்கப்படும்.

5. விண்ணப்ப முடிவுத் திகதி, 10-04-1994

6. நேர்முகப் பரீட்சை; தகுதியுடையவர்கள் எனத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கட்கான நேர்முகப் பரீட்சை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

7. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்புற மேல் மூலையில் "நில அளவைப் பயிற்சி" என்று குறிப்பிடவும்.

8. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது பூரண சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**இயக்குநர் (பயிற்சிப் பிரிவு)**
தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம்
ஈழநாதம் இல: 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8876)

சிந்தனைக்கு

நான் கூவுவதைக் கேட்கவே சூரியன் உதயமாகின்றான் என்று எண்ணும் சேவல் போன்றவன் அவன்;
- ஜார்ஜ் ஈலியட்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2022
தபால் பெட்டி எண் 05


## ஜே.ஆரின் புதுவழி

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தை தனித் தனியாகப் பிரிப்பதற்கு - தற்பொழுது பேச்சளவில் இணைந்த நிர்வாகமாக உள்ளது - சர்வசனவாக்கெடுப்புத் தேவையா? இல்லையா? என்பது குறித்த வாதம் இன்று சிங்கள அரசியற் தலைவர்களிடம் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

அண்மையில், எதிர்க்கட்சியினர் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்குப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்று நடத்தினால் மட்டும் போதுமானது. சர்வசனவாக்கெடுப்பொன்று கிழக்கில் நடத்தத் தேவையில்லை, அது அநாவசியமானதொன்று என அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினர். எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் எதிர்க்கட்சியினர், 'தமிழர் விடயத்தில் மட்டும் 'வீடு கொளுத்தும் ராசாவிற்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாகவே' செயற்பட்டு வருகின்றனர் என்பதற்கு இதுவுமொரு உதாரணமாகும்.

ஆனால் தற்பொழுது சிறிலங்காவின் கிழநரியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கிழக்கு மாகாணத்தை துண்டாடுவதற்கான தனது ஆலோசனையை வழங்கியுள்ளார். இவர் எதிர்க்கட்சியினரை விட மேலும் ஒரு படி மேலே சென்று கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பொன்று நடத்தப்படுவது சட்ட விரோதமானது எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய - சிறிலங்கா உடன்பாட்டு சரத்துக்கள் முழுமையாக நிறைவேற்றப்படாமையினால், பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கையுடன் வடக்கு- கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி நிர்வாக அலகுகளாக மாற்றிவிடலாம் என்பது ஜே. ஆரின் ஆலோசனையாகும். அதை மீறிச் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது என்பது அரசியலமைப்பை உதாசீனம் செய்வதாகும் என்பதே ஜே. ஆரின் நிலைப்பாடாகும்.

வடக்கு- கிழக்கு இணைப்பிற்கு ஜே. ஆர். எப்பொழுதுமே எதிர்ப்பைத் தெரிவித்து வந்தவர் தான். சர்வசன வாக்கெடுப்பு மூலம் கிழக்கை துண்டாடிவிடலாம் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் தற்பொழுது ஒரு அறிக்கையுடன் காரியத்தை முடித்துவிடலாம் என அவர் அறிவித்திருப்பது, சர்வசன வாக்கெடுப்பு பாதகமாக அமைந்துவிடும் என்று அவர் சந்தேகப்படுவதையே காட்டுகின்றது எனத் துணிந்து கூறலாம்.

# தேர்தலின் போது அதிகாரிகள் பக்கச்சார்பாக நடக்கக் கூடாது

## முக்கிய பிரமுகர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் மூகமாக அரசாங்க ஊழியர்கள் பக்கச் சார்பின்றியும், நேர்மையோடும், கண்ணியத்தோடும் செயற்பட வேண்டுமென பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் பலரும் வெளியிட்ட அறிக்கையொன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ் அறிக்கையில் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை கொண்ட நாட்டுமக்கள் என்ற வகையில், எல்லாத்தரப்பு மக்களும் நீதியான சுதந்திரமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். தேர்தல் என்பது ஜனநாயக அமைப்பின் உயிர்நாடி என்பதும், பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கானது என்பதும் தெரிந்ததே. ஜனநாயக அமைப்பின் நம்பகத்தன்மை என்பது சுதந்திரமாகவும் அமைதியாகவும் நடத்தப்படும் தேர்தல் மூலமே பாதுகாக்கப்படும் என்பதுடன், எந்தவொரு கட்சியும் வன்முறைகளில் ஈடுபடுவதை ஆதரிக்காது என்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் சார்பாக தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகளின் தோள்களில் பெரும் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகள், கிராம சேவை அதிகாரிகள் முதல் தெரிவத்தாட்சி அலுவலர் வரையில் இத் தேர்தல் கடமையில் ஈடுபடும் அனைவர் மீதும் பரிசுத்தமான கடமையொன்று சுமத்தப்பட்டுள்ளது. எனவே அவர்கள் அனைவரும் மற்றும் செல்வாக்குகளுக்கு உட்படாமல்பாரபட்சமின்றியும்பக்கம் சாராமலும் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

# வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்வில் தொண்டாவுக்கு இடம் வழங்க கூடாது

## - காமினி திசாநாயக்க

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலின்போது இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக இருக்கப்போவதில்லை எனினும் பொதுவாகவே ஐ. தே. க. எதிர்ப்பு மனோபாவம் கொண்ட மக்கள் பெருமளவில் வாழும் இப்பகுதியில் இம்முறை ஐ. தே. க. அதிகப்படியான அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் என்று நம்புவதாக முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க கூறியுள்ளார்.

கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், மக்கள் வன்முறை அலை மீண்டும் தோன்றுவதையோ, மரணங்கள் மற்றும் அழிவுகள் தொடர்வதையோ விரும்பவில்லை போல் தெரிகின்றது. கருத்து வேறுபாடான அரசியல் முரண்பாடுகள் மோதலாக இட்டுச் செல்லப்பட்டமைதான் கடந்த காலத்தில் இத்தகைய நிலையைத் தோற்றுவித்து இருந்தது.

டி. பி. விஜேதுங்கா ஒருங்கிணைப்பவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு சிந்திக்கக் கூடியவராகவும் இருக்கிறார். எனவே இந்த நேரத்தில் அவரது கரத்தைப் பலப்படுத்தும் வகையில் தென் மாகாண மக்கள் வாக்களிப்பர் எனக் கருதுகிறேன்.

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பான மற்றுமொரு கேள்விக்கு காமினி திசாநாயக்கபதிலளிக்கையில், இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையே என்றும், உள்ளூர் மட்டத்திலேயே இதற்கு தீர்வு காணப்படவேண்டுமாயினும் ஏராளமான வெளிநாட்டுத் தலையீடுகள் அதிகமாக இருக்கிறது என்றும், இருந்தாலும் தொண்டமான் கள் தீர்வைத் தேடும் சந்தர்ப்பம்ஏற்படுத்தப்படக்கூடாது என்றும் தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதி கருதுவது போல பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதும் எல்லாப் பிரச்சினைக்கான தீர்வும் ஆரம்பித்துவிடும் எனவும் தெரிவித்தார்.

# சர்வதேச அவதானிப்பு குழுவில் நம்பிக்கை இழந்து விட்டோம்

## -திருமதி சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

தென்மாகாண தேர்தலில் ஐ தே. கட்சி தோற்கடிக்கப்பட்டால் அநுராவை மீண்டும் உங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்வீர்களா என்று மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவிடம் கேட்கப்பட்டபோது இந்தக் கேள்விக்கே நான் அதிகாரத்துக்காக அல்லது பதவிக்காக எவரது தயவையும் எப்போதும் நாடியதில்லை. ஒருவேளை எனது தாயார் அரசியலிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்து, கட்சி அவரது இடத்திற்கு என்னை நியமிக்கத் தீர்மானித்தால் அப்போது அது வேறு விடயமாக இருக்கும்.

அரசைக் கோரவில்லை எனக் கேட்கப்பட்டபோது இது தொடர்பாக கட்சியில் பிரஸ்தாபித்தேன். பலர் சர்வதேச அவதானிப்பாளர்களில் நம்பிக்கை இழந்து இருந்தனர்: 1988 தேர்தலின் போதும் பிரிட்டன் பாராளுமன்றத்திலிருந்து அவதானிப்பாளர்கள் வந்திருந்தனர்-

# சேஷன் பெயரில் ரசிகர் மன்றம் உதயம்

(டில்லி)

இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் .டி. என். சேஷனுக்கு ரசிகர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதிக்குஅருகேயுள்ளவயல்பாடிகிராமத்தில் இந்த மன்றம் அமைக்கப்பட்டுள்ளது,

இந்திய அரசியலை தூய்மைப்படுத்துவதற்காகதேர்தல் சீர்திருத்தங்களை துணிவுடன் பல அரசியல் வாதிகளின் எதிர்ப்புக்கும் மத்தியில் முன்னெடுத்து வரும் சேஷனைப் பாராட்டும் மாணவர்களும், இளைஞர்களும் இந்த ரசிகர் மன்றத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர்.

தங்கள் கதாநாயகனாக டி. என். சேஷனைப் பிரகடனம் செய்திருக்கும் இந்த இளைஞர்கள் புகைப்படங்களுடன் கூடிய வாக்காளர் அட்டை தேவை என்றும் டி. என், சேஷனின் சர்ச்சைக்குரிய திட்டத்திற்கு ஆதரவு திரட்டும்முகமாகநிதிசேகரிக்கும்நடவடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

சேஷனின் நடவடிக்கைகளால் ஆவேசமுற்றிருக்கும் இந்திய அரசியல் வாதிகளுக்கு சேஷன் ரசிகர் மன்றத்தின் நடவடிக்கைகள் மேலும் அதிர்ச்சியை ஊட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# பெனாசிரின் அரசுக்கு முதலாவது பெரும் தோல்வி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் செனட் சபையின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் பதவிகளுக்கானதேர்தலில்பிரதமர்பெனாசிர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி தோற்கடிக்கப்பட்டுள்ளது. இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்ற இத் தேர்தலில் மக்கள் கட்சியின் தோல்வியானது திருமதி பூட்டோ மீண்டும் பதவிக்கு வந்த பின்னர் சந்தித்த முதலாவது மிகப் பெரும் அரசியல் தோல்வியாகும், எதிர்க்கட்சியின் வேட்பாளர்கள் 48-36 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர்,

# பாக். உடன் பேச இந்தியா ஆர்வம்

## வெளியுறவு செயலர் கே. சிறினிவாசன்

(டில்லி)

பாகிஸ்தானுடன் வெளியுறவு செயலர்கள் நிலையிலான பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது இந்திய வெளியுறவு செயலர் கே. சிறினிவாசன், நேற்று முன்தினம் புதுடில்லியில் பாகிஸ்தான் தூதுவரைச் சந்தித்தபோது இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்,

பாகிஸ்தான் அரசிடமிருந்து இதற்கான சாதகமான பதிலை விரைவிலேயே எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த கே. சிறினிவாசன் மேலும் கூறுகையில், பாகிஸ்தானின் வசதிகேற்ப இஸ்லாமாபாத்தில் அல்லது புதுடில்லியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் குறிப்பிட்டார். பாகிஸ்தானின் எதிர்மறையான அணுகுமுறை பற்றி அவர் கவலைதெரிவித்ததோடு இதுவரைதீர்க்கப்படாமல் இருக்கும் விடயங்களைப் பொறுத்தவரையில் சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப்படலாம் எனவும் தெரிவித்தார்.

# தென்னாசிய உறுதிக்கு அச்சுறுத்தல்கள் இருக்கிறது

## மாலைதீவு - இந்தியா கவலை

(டில்லி)

தென்னாசியாவின் உறுதிப்பாட்டிற்கும், பாதுகாப்புக்கும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் தீவிர சமய ... ந்து அவரைக் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற இரவு விருந்தில் சமயசார்பற்ற கட்டமைப்பை குலைக்க முய...

துணிந்து கூறலாம்.

இலங்கையில் இன்று நடைபெறும் பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்குக் காரணமானவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா. தனது ஆட்சியதிகாரத்தைப் பாதுகாக்கவென அவர் அரசியலமைப்புத் தொடக்கம் எதிலும் கைவைக்கத்தயங்காதவர். அவர் உருவாக்கிய அரசியலமைப்பில் இன்றைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறார். அதை மாற்றி அமைத்து விட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த வகையில் பார்க்கும் போது கிழக்குமாகாணம் தொடர்பாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா தானே உருவாக்கிய ஒரு நெருக்கடிக்கு தானே புதுவழி காட்டவும் முற்பட்டுள்ளார் என்றே கூறலாம். சர்வசன வாக்கெடுப்பில் இருந்து பின்வாங்கி ஜே. ஆர். புதுவழியைத் தேடுவதற்குக் காரணம் எதுவாக இருப்பினும், அவர் சர்வசன வாக்கெடுப்பு சிலவேளை, விஷப்பரீட்சையாக அமைந்துவிடுமோ என ஐயுறத் தொடங்கிவிட்டார் என்பதே உண்மையாகும்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவ்வாறு எண்ணுவதற்கு டி.பி. விஜேதுங்காவின் வெளிப்படையான பேரினவாதப் போக்கும் அதனால் சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் உருவாகி வரும் ஐயப்பாடுகளுமே காரணமாக இருக்க முடியும். ஜே ஆர். எப்பொழுதுமே முஸ்லிம்களை தனது அரசியல் பகடைக்காய்களாகவே பயன்படுத்தி வந்தார். அத்தோடு டி.பி, விஜேதுங்கா முஸ்லிம்களை அவரைப் போல் அரவணைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறவேண்டுமானால் அதற்கு முஸ்லிம்களின் முழுமையான ஆதரவு தேவை. ஆனால் அது குறித்து இன்று பூரண நம்பிக்கை ஜே.ஆருக்கு இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் இவ்விடயத்தில் நிபந்தனையுடன் கூடிய நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதே காரணமாகும். இந்நிலையில் தனது பழைய பாணியில் ஜே.ஆர். தேடிய புதிய வழியே பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கையுடன் பிரித்துவிடலாம் என்ற அறிவிப்பாகும்.

ஆனால் எதிர்க்கட்சிகள் என்ன? முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர், என்ன? இன்றைய ஜனாதிபதி டி,பி. விஜேதுங்கா என்ன? யார் எந்த முடிவை எடுத்தாலும் தமிழர்களைப் பொறுத்து தமிழர் தாயகம் இணைந்தே உள்ளது. அது இணைந்தே இருக்க வேண்டும். அதை பிரிப்பதற்கும் சிதைப்பதற்கும் எடுக்கப்படும் முயற்சிகளால் இனப்பிரச்சினை மேலும் சிக்கலுக்கும் நெருக்கடிக்கும் உள்ளாகுமே ஒழிய ஒரு போதும் பிரச்சினை தீர உதவப்போவதில்லை.

ரணதுங்கவிடம் கேட்கப்பட்ட போது இந்தக் கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் அநுரவுக்கும் எனக்கும் இடையிலான தனிப்பட்ட பிரச்சினையல்ல. அதுபற்றிக் கட்சியே முடிவு செய்ய வேண்டும் எனப் பதிலளித்தார்.

கொழும்புவாரப்பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்தஅவர் மேலும் குறிப்பிடுகையில், அநுரதான் என்னைத்தாக்கி வருகிறார். ஆனால் நான் அவரைத் தாக்கி பேசி வரவில்லை. பொருத்தமற்ற பொய்களைக்கூறி அவர் பிரசாரம் செய்து வருகிறார்.

னித்தால் அப்போது அது வேறு விடயமாக இருக்கும். எனினும் அது வரையில் நான் எதற்காகவும் எதிர்பார்த்து என்பணியைச்செய்யவில்லை. எனக்கு தரப்பட்ட பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றுவதற்காக ஒரு நாளில் இருபது மணித்திலாலங்கள் வரை நான் பணி செய்வேன். கடந்த 21 வருடங்களாக நான் அவ்வாறுதான் செயற்பட்டு வந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

இத் தேர்தலின்போது சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைக்கும்படி நீங்கள் ஏன்

மன்றத்திலிருந்து அவதானிப்பாளர்கள் வந்திருந்தனர்- எனினும் பிரேமதாச அரசுக்கு அவர்களது அறிக்கை திருப்தியாக இல்லாததைத் தொடர்ந்து அவர்கள் அதை வெளியிடவில்லை-இவையெல்லாம் எம்மை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது- மக்களின் விழிப்புணர்ச்சியின் மூலம் மட்டுமே தேர்தல் மோசடிகளைத் தடுக்க முடியும்- அறுதிப் பெரும்பான்மையுடன் பொதுசன முன்னணி இத்தேர்தலில் வெற்றியீட்டும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்,

கும் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் தீவிர சமயவாத நடவடிக்கைகள் அச்சுறுத்தலாக இருப்பதாக இந்தியாவும், மாலைதீவும் கூட்டாக கவலை தெரிவித்து உள்ளன.

மாலைதீவு அதிபர் மாமூன் அப்துல் கையூம் புதுடில்லிக்கு மேற்கொண்டுள்ளஉத்தியோகபூர்வ விஜயத்தைத் தொடர்

டமைப்பை குலைக்க முயலும் நடவடிக்கைகள் நாட்டின் முன்னேற்றத்தையும், அப்பகுதியையும் பாதிப்பதாக இருப்பதாக குடியரசுத்தலைவர் டாக்டர், சங்கர் தயாள் சர்மா தெரிவித்தார்.

இதே போன்றதான ஒத்த கருத்துக்களையே மாலைதீவு ஜனாதிபதியும் இங்கு பேசுகையில் வெளியிட்டார்.

# தேர்தல் முடிவுகளுக்குப் பின் சிறிமாவோ ஐ.தே.கவில் சேர்வார்

## - சிறிசேன குரே

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஐ.தே. கவில் சேர்ந்து விடுவார் என்று வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரும் ஐ, தே. க பொதுச்செயலருமான சிறிசேன குரே கூறியுள்ளார்,

பியகம பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் ஒன்றில்உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், ஐ. தே- க- தேசிய முன்னேற்றத்தின் சின்னமாகவும், சுதந்திரக்கட்சி தோல்வியுற்ற கொள்கைத் திட்டத்தின் சின்னமாகவும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றன

எதிர்க்கட்சிகள் இன்று மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் புகழை இழிவுபடுத்தும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன, எனினும் நான் அவரை, நீண்ட காலமாக அவர் கொழும்புமாநகர சபை உறுப்பினராக வருவதற்கு முன்பிருந்தே அவரை நான் நன்கறிவேன். பிரேமதாசா தனது குண நலன்களையே எல்லாவற்றையும் விட மேலாக மதித்தார்- அவர் புகைப்பதில்லை அவர் மதுவகை அருந்துவதில்லை, அவர் மாமிசம் புசிப்பதில்லை அவர் இரவும் பகலும் தேசத்திற்காகவே வேலை செய்தவர் அவரது பெயரை மாசுபடுத்தும்இவர்கள்பியகம பகுதியில் வாக்கு கேட்கின்றனர் இத்தகைய சந்தர்ப்பவாதத்திற்கு நீங்கள் பலியாகக் கூடாது.

இருண்ட நாட்களிலிருந்து நாட்டைமீட்டுவந்ததுஐ,தேக தான் ஏழை மக்களை படிப்படியாக செல்வந்தர்களாக உயர்த்தும்நடைமுறைவேலைத்திட்டத்தை கொண்டிருப்பது ஐ,தே,க தான். இலவச பாடப்புத்தகம், இலவச கல்வி இலவச உணவு, இலவச மருத்துவ சேவை என்பவற்றின் மூலம் ஏழைகள் நலன்களைப் பாதுகாப்பதில் ஐ.தேக தான் ஈடுபட்டது கிழக்கில் செய்தது போல வடக்கு- கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளையும் மேற்கொண்டு வருகின்றோம், வடக்கில் மட்டும் தான் இன்று ஜனநாயகம் செயற்படவில்லை, விரைவில் அங்கும் ஜனநாயகத்தை மீள ஏற்படுத்தி யாழ்ப்பாணத்திலும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவோம் எனவும் தெரிவித்தார்

# தேர்தல் முடிவுகளையடுத்து அரசில் மாற்றம் வரும்

## அவதானிகள் கருத்து

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல் நாளை நிறைவு பெறுவதையடுத்து அரசாங்கத்தில் பாரிய மாற்றங்கள் வரலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது எதிர் வரும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கு முகம் கொடுக்கும் வகையில் இந்த மாற்றங்கள் அமையும் என்று மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ தே க- வில் மீண்டும் இணைந்து கொண்டுள்ள முன்னாள் அமைச்சர்களான காமினி திசாநாயக்க, றொனி, டி. மெல் போன்றோரின் எதிர்கால அந்தஸ்துக்கள் இந்த மாற்றத்தின் போது நிச்சயமாகலாம் எனவும், சிங்கள திரைப்பட நடிகரும் உபசபாநாயகருமான காமினி பொன்சேகா தென் மாகாண பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருப்பது அரசாங்க மட்டத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது-

இதேவேளை தென் மாகாணசபைத்தேர்தல்நிலைவரங்கள் தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

# தேர்தல் அதிகாரியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர்

தென் மாகாணத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் ஒருவர் தேர்தல் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் ஜனாதிபதியின் உத்தரவுககமைய இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது

செனிவிரட்ண பண்டா எனும்இந்தபிரதி பொலிஸ்மா அதிபர் தென் மாகாண சபைத் தேர்தல் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டது பொலிஸ் வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# முழு பொறுப்பும் டி. பியே

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்தால் அதன் முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி டி. பி, விஜேதுங்காவே ஏற்க வேண்டும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்,

டி, பி. விஜேதுங்காவின் ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் மற்றும்ஐக்கிய தேசியக்கட்சியில் உட்பூசல்களுக்கும்கிடைத்த தண்டனை இதுவென அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்,

தென்மாகாணசபைத் தேர்தல்

# எதிரணியினருக்கு வெற்றி வாய்ப்பு கருத்துக் கணிப்புக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலில் எதிர்க்கட்சிகளின் கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணியே வெற்றி பெறும் வாய்ப்பு இருப்பதாக 'ராவய' சிங்களப் பத்திரிகை இம்மாகாணத்தில் எடுத்த கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னர் நடந்த தென்மாகாணசபை தேர்தலில் 71 சதவீதமானோர் வாக்களித்திருந்தனராகவும் ஆனால் இம்முறை இது 80 சதவீதமாக அதிகரிக்கலாம் எனவும் அக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

53 உறுப்பினர்களைக் கொண்ட தென்மாகாண சபையில் 30 பேர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்தும் 23 பேர் ஐ.தே.கவிலிருந்தும் தெரிவுசெய்யப்படுவர் என கணிப்பு கூறுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு காலி மாவட்டத்தில் 18 இடங்களும், மாத்தறை மாவட்டத்தில் 9 இடங்களும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 8 இடங்களும் கிடைக்கும் எனவும், ஐ.தே. கவிற்கு காலியில் 9 இடங்களும், மாத்தறையில் 8 இடங்களும், அம்பாந்தோட்டையில் 6 இடங்களும் கிடைக்கும் என ராவய கணிப்பு கூறுகிறது.

இதே சமயம் லங்கா தீப எடுத்த மற்றுமொரு கருத்துக் கணிப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி 52.72 சதவீத வாக்குகளையும், ஐ.தே.க. 45.76 சதவீத வாக்குகளையும் பெறும் என தெரியவந்துள்ளது.

## சுனேத்திரா ருபசிங்கவை இணைக்க ஐ.தே.க. முயற்சி

(கொழும்பு)

ஐ.தே.க. வில் சுனேத்திரா ருபசிங்கவை சேர்த்துக் கொள்வதற்கான தீவிர நடவடிக்கைகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேற்கொண்டு வருகிறார்.

இவருக்கு தேசியப்பட்டியல் மூலம் எம்.பி. பதவி வழங்கப்பட்டு ஓர் அமைச்சு பதவியும் வழங்க தீவிர முயற்சியில் இவரது தம்பியாரான அனுரா பண்டார நாயக்கா ஈடுபட்டு வருவதாக சிங்கள தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களது மூத்த சகோதரியும் மேல்மாகாண சபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காவின் செல்வாக்கு செல்வதாலும் இதனை தடுக்க அநுரா பண்டார நாயக்காவினால் முடியாமல் இருப்பதாலும் பண்டார நாயக்கா ரத்வத்த குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவர் மூலம் சந்திரிகாவின் செல்வாக்கை குறைக்க முடியும் என ஐ.தே.க வட்டாரங்கள் கருதுகின்றன. இதற்காகவே சுனேத்திரா ருபசிங்கவை ஐ.தே.க. வில் சேர்த்துக் கொள்ள முயற்சி நடைபெற்று வருவதாக அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

---

தமிழீழ நீதிமன்றுகளுக்கான
பிஸ்கால் உத்தியோகத்தர்

## பதவிக்கான வெற்றிடம்

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் கீழ் இயங்கும் நீதிமன்றுகளுக்கான பிஸ்கால் உத்தியோகத்தர் பதவிக்கான பின்வரும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கல்வித்தகைமை- க. பொ. த. (சா. தரம்) சித்தி
2. வயதெல்லை- 18 - 35 ஆண்டுகள்

மேற்குறித்த தகைமைகள் உள்ளவர்கள் 11-04-94-ம் திகதிக்கு முன்னர், தமது விண்ணப்பங்களை பொறுப்பாளர், தமிழீழ நீதி நிர்வாகத்துறை, நடுவப்பணியகம் தமிழீழம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ நீதி நிர்வாகத்துறை,
தமிழீழம்.

(சி-8895)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## பொது அறிவித்தல்
### விடுமுறைச் சந்தை

27-03-94 ஞாயிறு முதல் இயங்கவுள்ள மேற்படி விடுமுறைச் சந்தை எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு 15.04.94 ஆம் திகதி வரை தினச்சந்தையாகவும், அதன்பின்னர் விடுமுறைச் சந்தையாகவும் இயங்கவுள்ளது.

---

# புலிகள் மீதான தடை உத்தரவை மேலும் இரண்டாண்டு நீடிக்குக!

## மத்திய அரசிடம் ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடையை மத்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கச்செய்யவேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று சட்டப்பேரவையில் உரையாற்றிய முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்வரும் மே மாதம் முன்னைய தடையுத்தரவுக் காலம் முடிவடைகிறது எனவும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை தொடர்ந்து நன்கு பராமரிக்க புலிகள் மீதான தடையை நீடிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

சட்டம் ஒழுங்கை பேணுவதில் மாநில அரசு மிகுந்த விழிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு மத்திய அரசும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தமிழகத்தில் தீவிரவாத சக்திகளையும் தீய சக்திகளையும் மாநில அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும். வெளிநாடுகளிலிருந்து கடல் வழியாக வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள கூடுதலான கடற்படை கண்காணிப்பு நிலைகளை அமைக்கவேண்டும் எனவும் முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தார். தற்போது சந்தேகத்திற்குரிய பிறநாட்டவர்களை கைது செய்து சிறப்பு முகாமில் காவலில் வைக்கும் அதிகாரம் மட்டுமே மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக அவர்களை கைது செய்து சிறையில் அடைக்கும் விசேட அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கவேண்டும்.

இந்த அதிகாரம் இல்லாமையினால் தான் சந்தேகத்திற்குரிய வெளிநாட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்க இலங்கையில் இருந்து இந்தியா வருபவர்களுக்கு விசா கட்டுப்பாடு விதிகள் மேலும் கடுமையாக்கப்படவேண்டும் எனவும் முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசைக் கோரினார்.

## மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரன் விடுதலை

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் பாணந்துறை உயர் நீதி மன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். 15,000 ரூபா பணமாகவும் 500,000 ரூபா சரீரப் பிணையாகவும் இவர் விடுவிக்கப்பட்டார்.

1991 ஜூலையில் கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு சம்பவத்தில் பிரதான சந்தேக நபரான வரதனுக்கு புகலிடம் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்திரசேகரன் கைதாகியிருந்தார்.

இவரை விடுதலை செய்வதனால் நாட்டின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலையும் இழைக்கமாட்டாது என உயர் நீதி மன்றத்தில் சந்திரசேகரனின் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். இதே கோரிக்கை பாதுகாப்பு அமைச்சிற்கும் விடப்பட்டது. இதனையடுத்து சந்திரசேகரன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## புலிகளின் நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை

### இந்திய உள்துறை இணை அமைச்சர்

(டில்லி)

தமிழ்நாட்டிலும், இந்தியாவின் ஏனைய சில பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காணப்படுவதாக இந்திய உள்துறைஇணை அமைச்சர் பி. என். சையித் தெரிவித்துள்ளார். இந்தியா எப்போதுமே எச்சரிக்கையாக இருப்பதாகவும் இதற்கேற்ற வகையில் சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மற்றும் இதுபோன்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட பாகிஸ்தான் நிறுவனங்கள் முயற்சித்து வருவதாக தமக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் சையித் மேலும் தெரிவித்தார்.

## மர்மப்பொருள் வெடித்து இளம் பெண் காயம்

(வடமராட்சி)

மர்மப்பொருள் ஒன்று வெடித்து யுவதி ஒருவர் படுகாயமடைந்தார். உடுப்புக்குப் பயன்படுத்தும் பொத்தான் போன்ற பொருள் எதிர்பாராமல் வெடித்த போதே யுவதி படுகாயமடைய நேரிட்டது.

கரணவாய் மத்தி பூவக்கரையைச் சேர்ந்த ஆறுமுகம் சுகந்தி (வயது 17) என்ற யுவதியே இவ்வாறு படுகாயமடைந்தார். இவ்வெடிச் சம்பவத்தையடுத்து இவரது பத்து விரல்களும் சிதம்பின. ஒரு கண் பார்வையிழந்தார்.

இது பற்றி மேலும் தெரியவருகையில் வீட்டு முற்றத்தில் இருந்து தெறி வடியிலான ஆறு மர்மப் பொருளை எடுத்து பின்னர் இதனை உரசிய போது இவைகள் பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும் அதன் போது இவரது விரல்கள், கண் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த இவர் அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (சோ)

---

எமது புதிய வெளியீடுகள்

1) அருண்பாண்டியனின்
- ஊழியன் -
2) ராஜா – செந்தில்...
சுதந்திர பாரதி

(அனைத்தும் கொழும்பு மாஸ்ரர்பிரதிகள்)

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8803)

---

## தபால்கள் வந்தன

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த 'வாதுவ' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் 587 தபால் பொதிகள் வந்துள்ளன. தபால் பொதிகளுக்குமேல் பொருள்கள் இருப்பதினால் அவை இறக்கப்பட்டபின்னரே நாளை தபால் இறக்க முடியும் என தெரியவருகிறது.

மற்றும் யாழ். தபால்

## சேவை நலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்று

## தவறான அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செம்பிமடு பகுதியில் கடந்த புதனன்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலின் போது கப்டன் அரவிந் (செல்வராஜ் ஜெயராஜ் அமிர்தகளி மட்டக்களப்பு) வீரச்சாவடைந்ததாக வெளிவந்த செய்தி தவறானது என்பதை வருத்தத்துடன்

27-03-94 ஞாயிறு முதல் இயங்கவுள்ள மேற்படி விடுமுறைச் சந்தை எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு 15.04.94 ஆம் திகதி வரை தினச்சந்தையாகவும், அதன்பின்னர் விடுமுறைச் சந்தையாகவும் இயங்கவுள்ளது.

இச்சந்தையிலுள்ள வியாபார இடங்கள் 26.03.94 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. மேலதிக விபரங்களை மாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்.
22.03.94 (இ-8894)

---

பிராந்தியம் 6 லயன்ஸ்
புற்று நோய் நிதியம்
Region 6 Lions - Cancer Fund
We Serve

அதிர்ஷ்ட லாப
சீட்டிழுப்பு முடிவுகள்

மூதல் பரிசு — C 3267
இரண்டாம் பரிசு — B 0514
மூன்றாம் பரிசு — B 2868

ஆறுதல் பரிசில்கள் (தலா ரூபா 500/-)

| | | |
|---|---|---|
| 1) A 1161 | 2) A 8041 | 3) A 0601 |
| 4) B 0548 | 5) A 1117 | 6) C 3236 |
| 7) C 2702 | 8) B 1549 | 9) B 0541 |
| 10) B 1534 | | |

தயவு செய்து மேல் தரப்பட்ட இலக்கங்கள் மூலம் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் பிராந்தியத் தலைவர் லயன் சு. இராமகிருஷ்ணன், 34 B, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாண இல்லத்தில் வாரத்தில் செவ்வாய், வியாழக்கிழமைகளில் மாலை 4-30 மணி தொடக்கம் 6-00 மணி வரை 21-04-1994க்கு முன் அதிர்ஷ்ட சீட்டுக்களை (Tickets) சமர்ப்பித்து தங்களுடைய பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பிராந்தியத் தலைவர்

(7825)

---

நகராட்சி மன்ற யாழ்ப்பாணம்

வடிவேல் விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-8893)

---

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்
துணைவேந்தர்- பேராசிரியர்
அ. துரைராசா அவர்களின்

## சேவைக்கால பாராட்டு



''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய சிறப்புற எமது பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பணிபுரிந்து விடைபெற்றுச் செல்லும் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் இன்றுபோல் என்றும் ஸ்ரீ சாயி துர்க்காதேவி அம்மன் அருளால் புகழ்பெற்று சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்தும் அன்பன்

த. செ. செல்வகுமார்
(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தரும், தற்போதைய மருத்துவபீட சட்ட மருத்துவத் துறை ஊழியனும், யாழ். பல்கலைக்கழகம்)

(7825)

---

பொருள்கள் இருப்பதினால் அவைஇறக்கப்பட்டபின்னரே நாளை தபால் இறக்க முடியும் என தெரியவருகிறது.

மற்றும் யாழ். தபால் திணைக்களம் கொழும்பு மற்றும் வெளியூர்களுக்கான 97 தபால் பொதிகளை இன்று 'கோமாரி' கப்பலுக்கு பாரப்படுத்தியுள்ளது.

(யோ)

---

## இரு மீனவர்களின்

கல்முனைக் கடற்கரையில் ஒதுங்கிக் கிடந்ததைக் கண்ட தேடிச் சென்ற உறவினர்கள் மீட்டு வந்தனர்.

றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த இலுவை ஜிம்றோண் (வயது 23) என்பவரது சடலம் அரியாலை கொழும்புத்துறைக் கடலில் கரை ஒதுங்கியதைக் கண்ட உறவினர்கள் மீட்டனர்.

இரு சடலங்களும் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

(17,21)

---

## தேர்தலுக்கு

ததே.

ஆயினும் தென்மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு அரச தரப்பில் கேட்கப்பட்ட போதிலும் இராணுவம் முழுமையாக தயார் நிலையில் இல்லாததினால் உடனடியாக பாரிய இராணுவ நடவடிக்கை யொன்றை மேற்கொள்வது நடைமுறைச் சாத்திய மற்றது எனவும் இராணுவ உயர் அதிகாரியொருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

---

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவுக்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்று இன்று மாலை 5 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அரங்கில் சட்டத்தரணி இ. உருத்திரா தலைமையில் நடைபெறும்.

---

## தங்கப்பதக்கம்

பதக்கத்தினையும், எழுதுவினைஞர்களின் தொழிற்சங்க தலைவர் அருணகிரிநாதன் கேடயத்தினையும், தொழில்நுட்ப வியலாளர்களின் தொழில் சங்க தலைவர் சு. தேவதாசன் மாலை அணிவித்தும் கௌரவித்துள்ளார்கள்- மேலும் துணைவேந்தர் பற்றிய புகழ்மாலைகள் வாசிக்கப்பட்டு அவற்றை படச்சட்டங்களாக வழங்கியிருந்ததையும் குறிப்பிடத்தக்கது. (07), (05)

---

(செல்வராஜ் ஜெயராஜ் அமிர்தகழி மட்டக்களப்பு) வீரச்சாவடைந்ததாக வெளிவந்த செய்தி தவறானது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

---

## விளையாட்டு

கரைசல் பட்டதாக தெரிய வருகின்றது.

இதேவேளை ஆசிரியர் மாணவர்களுக்கு இக்கரைசல் மனித உடலில் பட்டால் ஏற்படும் தீமையை பற்றி ஏற்கனவே சொல்லியிருந்த போதும் மாணவர்களின் இவ் விளையாட்டு வினையாகி உள்ளது. மேற்படி இருமாணவர்கள் மீதும் அதிபரினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. பண்ணாகத்தை சேர்ந்த கௌரி தெட்சணாமூர்த்தி என்றமாணவியே இச்சம்பவத்திற்கு இலக்கானவர் ஆவார்.

---

உள்வந்த வெளிச்சென்ற
வாகன இலக்கங்கள்
22-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1374

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

27-9772, 24-6972, 42-2317, 28-3429, 41-8155, 24-8429, 26-5882, 26-2668, 24-1983, 27-8283, 26-6062, 26-9158, 26-4058.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-5281, 26-2745, 26-8917, 26-5846, 22-3088, 26-6628, 24-7360, 26-9186, 27-7952, 26-3628, 24-4491, 27-5863, 22-6163, 28-1754, 27-4859, 41-5605, 26-4568, 27-5049, 28-6263, 24-5323.

---

இணையற்ற சுவை | குளிர்களி வகைகள் குளிர்பான வகைகள் | சுவையருவி | சைவ, அசைவ உணவு சிற்றுண்டி வகைகள் | நிகரற்ற தரம் சுகாதாரம்

மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(இ-8887)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது